[illegible]

V1: No- 13 29 MM 1928

JL
[illegible] 2 N28 K.N
N28.1.13.
188996.

672

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 MAY 1928
MADRAS

Vol 1.] 1928ஞு மார்ச்சுமீ 29உ [No. 13.

பொருளடக்கம்.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 241 |
| 2. | காந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L. | 243 |
| 3. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L. | 245 |
| 4. | தமிழ்ப் பாடம் | 247 |
| 5. | கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L. | 250 |
| 6. | அகப்பொருள் வரலாறு K. இராமரத்நம் ஐயர். B. A. | 253 |
| 7. | வானசாஸ்திரம் | 255 |
| 8. | அரசியல் மலர்வன மல்லிகை (Ruskin) K. இராஜகோபாலன் | 256 |
| 9. | வர்த்தமானம் | 258 |

## கலா நிலயம்.

188996

### எந்த உரிமையை இழந்துளோம்.

அழகு விகாரம் என்னும் இவ்விரு தன்மைகளின் எதிர்நிலைப்பொருட் செய்தி யாதெனின்—வேறெனப் பிரித்துவைப்பதெல்லாம் விகாரம்: ஒன்றென ஒற்றுமை யூட்டுவதனைத்தும் அழகு. பிரபஞ்ச அமைப்பினில் நடப்பினில் இருபொருட்கு இருசெயற்கு ஓர் இயைபு இல்லாத்தன்மையில் அம்மனம் அகற்றிக் கருதுமாயின் அப்பொழுது நம்மனது விகாரப்பட்டிருக்கின்றது. மேனோக்காக நோக்குகின்ற காலத்திலும் இத்தொடர்புதான் முன்னின்று விளங்குகின்ற பொருள்களே நாம் பழகுகின்ற பொருள்களுள் பலவாகும். தொட்டிலைக் கண்டவளவில் அதற்குரிய பாலகனை நினைக்கின்றோம். இந்நினைவினால் தொட்டில் ஓர் அழகிய பொருளாகத் தோன்றுகின்றது. இத்தொடர்பு வெளி நினைவில் எழுந்தேனும் உள்ளுணர்வில் அமைந்தேனும் பிறவாதாயின் தொட்டிலும் நம் கண்ணிற்கு வெறும் கட்டையாகவே காணும். பொருள்களுக்குள் தொடர்பு எளிதில் காண்பதற்கு உதாரணம் அது. இவ்வாறே இருவேறு தொழில்களைத் தொடர்ந்துணர்வதும் அழகாம். குதலை மொழியிலிற்றிக் குறுநடைபயிலும் குழவியைத் தழுவியோர் தாய் நகைக்கின்றாள். இந்நிகழ்ச்சியைக் காணும் நாம் குழவியின்தொழிலையும் தாயின் தொழிலையும் முயற்சி யின்றியே இணைத்துக் கருதுகின்றோம். மகவைக் காணத் தாய் மகிழ்ந்தாள், என நமது உள்ளுணர்வில் தொடுக்கின்றபடியால் அத்தொடர்ச்சியில் நாமொரு அழகை நினைத்து உவகையும் எய்துவதாகின்றது. சேயின் செயலிற்கும் தாயின் சிரிப்பிற்கும் சம்பந்தமிருப்பதாக உணராமல் நம் மனம் அந்நிலையை மதிப்பது அரிது. மற்று அவ்வகைமதிக்குமெனின் அரும்பிய நகையளாய அவ்வன்னையின் முகத்தழகைக் காண்பதற்கொத்த பாக்கியம் நாம்செய்ததில்லை—அவ்வளவே.

இந்தவிதம் தோன்றிய தொடர்புபற்றி இயைந்துள இருபொருள்களேனும் செயல்களேனும் உடனாக வெய்தி அழகொடு கலந்த உவகை விளைப்பது சாதாரணமாயினும், அவ்வழகு விளங்குவதும் மகிழ்வுறுத்துவதும் தொடர்புணர்ச்சியால் நிகழ்வனவென்பதை யாவரும் தெரிந்து கொள்வது நலம். ஏனெனில் மேனோக்கிலேயே இத்தொடர்புதோன்றுவது பெரிதல்ல. இயற்கையாய சம்பந்தம் இருக்கின்றதை யுணர்வதால் நாம் எய்துகின்ற உவகை இவ்வுலகில் ஒரு கூறெனில், செயற்கையால் சிலவற்றைச் சேர்த்துக்கொண் டனுபவிக்கக்கூடிய பாகம் ஒன்பது. பொதுவாக இருபொருள்களுக்கும் ஓர் இயைபின்றி நம்மனம் தனித்தனி கருதுமாயின், அக்கருத்து நம்மை அழகினின்றும் வேறாக்கிவிடுகின்றது. மற்றுத் தனித்தனி கருதுவதோ டமையாது அவ்விரண்டும் ஒன்றோடொன்று மாறுகொண்ட தன்மையில் நினைக்குங்கால், அழகின்மையோடமையாது விகாரத்துள்ளும் நம்மைப் புகுத்திவிடும். இதனால் தன்னுளேயது துன்பத்தை விதைத்துக்கொள்வதாகின்றது. மற்றென்செயும்.

ஆதலின், சாதாரணமாய்ச் சம்பந்தம் காணப்படாத விடத்தும் ஆழ்ந்துநோக்கின் பொருள்களுக்குள் ஒற்றுமையும், செயல்களுக்குள் தொடர்பும் அமைந்துள வென்பது யாவரும் அறிவர். எனினும் அவ்வொற்றுமை தொடர்புகளின் தன்மை யாதெனத் தெருண்டுள மேலவர் சிலரே. உலகம் உய்ய வேண்டுமெனின் உற்ற துணையாகவல்லாரும் சிறப்பாய இச்சில மேன்மக்களேயன்றி யாருளர். அன்னார் அருமையை நாம் அறியவேண்டியது இன்றியமையாததாகும். வாளைப்போல் இப்பிரபஞ்சத்தை வேறு வேறு கூறுக்கி வகுக்கும் பழக்கமே வாய்ந்த நம்மனோர் இரண்டினை யொன்றாய் இணைக்கும் வழி எளிதிற் காணார். இணைப்பது இயலுமென எண்ணுவதுமே அவர்க்கு அரிது. அயலானொருவனைக் கண்ட மாத்திரத்தில் அவன் எச்சாதி எவ்வுறவு எனத் தன்னிலிருந்தும் மற்றவர்நின்றும் வேறுபட விவகரிக்கும் மனம் படைத்த பேர்க்குக் கூட்டெண்ணம் எங்கிருந்து வாய்க்கும். முனிவரும் புலவரும் சித்தம் பெரிதுடையார். குடையெனக் கவிந்த தம் கருத்தினுள் உலகம்யாவையும் சேர்ந்துடனடங்க நோக்கும் பான்மையர். இருபொருட்கும் இருசெயற்கும் இடைநின்ற தூரமும் காலமும் தோற்றத்தின் வேறுபாடும் யாவும் இவர்கள்பால் மறைந்து கிடக்கின்றன. முனிவரும் தமது அறிவினால் உள்ளுறை உயிர்நிலைத் தத்துவத்தைத் தேர்ந்துகொண்டு அத்துவித உபநிடத உபதேசம் செய்தருளுவர். புலவர், உள்ளுறை அத்துவித உணர்ச்சி தூண்ட மேனோக்கு நிலையையும் செயலையும் இணைத்துவைத்துத் தீங்கவிபாடுவர். இயற்கையாய வொற்றுமை நினைவு உள்நிகழ்கின்ற காரணத்தால் செயற்கையால் சில தொடர்பு இவர் செய்து காட்ட நேர்கின்றது. இதைத்தான் காவிய பாஷையில் கற்பனை என்பது. அழகினின் உணர்ச்சிபற்றிக் கற்பனைபிறக்கும். மேனோக்கிற்குச் சம்பந்தம்சிறிதுங் காணப்படா இரு பொருள்களுக்கிடையே வோர் தொடர்பு அமையும்படி கற்பிக்கின்ற காலையில், இயற்கையிலிலதேனும், வேறெனத்தோன்றும் அவைதமைக் கற்பனைத் திறத்தாலேனும் கலந்திணைத்த நலத்தினால் உவகை பொங்க அவ்வுவகையின் தத்துவமாய அழகெனும் அமிழ்தக்கடல் ஓங்கி யெழுகின்றது. இன்னவாறு தொடர்பு படுத்திய அப்புலவரின் திறமையைக்காண நாம் அதிசயம் எய்துகின்றோம். அவ்வதிசயத்தை நாம் அனுபவிக்கின்ற போதெல்லாம் அதனோடுடன் பிறந்த உவகைக்கும் அழகிற்கும் ஆளாகிப் புலவர் நினைத்ததெல்லாம் நாமும் சிறிது சிறிதாக நினைக்கின்ற பழக்கநலம் செவ்வனே நேர்கின்றது. அலங்கார காவியங்களை யோதுங்கால் நம்மகத்து விளைகின்ற இன்பத்தின் தத்துவ இரகசியம் இதுவென உணர்வோமாயின் நம்மிற் சிலர் மடமையால், புலவர்வாய்ப் பொய்யென்றும், கீழ்நாட்டு மிகைபுரை (Oriental exaggeration) என்றும் நாதந்தபடி பேசும் பழிபூணார்.

ஒற்றுமை நயமுணர்ந்த உவகையால் எழுமொழிகள் எம்புலவர்வாய் அணியென வருவன. உயர்வு நவிற்சி தற்குறிப்பேற்றம் சிலேடை உவமை தீவகம் அனைய அணிகள் யாவும் ஒற்றுமைபற்றித் தோன்றித் தொடர்பூட்டி வைப்பதாற்றான் நம்பால் உவகைக்கு இடமாகின்றன. கவிகளோடு இவ்வுவகையை உடனின்று அனுபவிக்க இயலாதார் அவிந்த கண்ணினர், குறுகிய கருத்தினர், இப்பிரபஞ்சத்தின் கூட்டுறவு வாழ்க்கையின்று தம்மை விலக்கிக்கொண்டவர். இத்தகைய பிரபஞ்ச பிரஷ்டருக்கு அதிசியோக்தி உத்பிரேக்ஷை சிலேஷை முதலிய அலங்காரங்களின் நலங்களால் எய்தும் பயனை நுகர்கின்ற உரிமை இல்லாது போயிற்று.

இந்த நோக்கத்தோடு வடமொழியிலும் அதனைத் தழுவிய தமிழிலும் வகுத்துள அணிகளின் இலக்கணங்களை ஆராய்தல் இனிமையை அளிப்பதன்றி உலகினில் நிரந்தரமான சில உண்மைகளை உய்த்துணர்தற்கு மாதாரமாகும். இத்தகைய ஆராய்ச்சி எளிதிலே யொரு நாளில் செய்யத் தகுந்ததன்று. சூத்திரத்திற்குச் செய்யுளும் செய்யுளிற்குச் சூத்திரமும் மாறி மாறி மனப்பாடம் செய்ததோடு அணிகளது பெருமை அறிந்தவராகோம். அவைகளின் பேரும் வகையும் கற்றவர் மட்டுமே யாகலாம். ஆயின் அதனாற் பயனில்லை. பேரன்றிப் பயனும் எய்தவேண்டுமாயின், மிகைபடக் கூறினன் இக்கவி என்று, எடுத்தவுடன் எள்ளாமல் காவியங்களில் வருகின்ற வருணனைச் செய்யுள்களை இடைவிடாது ஓதியும், ஓதாது ஒழிந்த நேரமெல்லாம் அவைகளை மனனம் செய்தும், முதிர்ந்த மனனத்தால் பாவனை செய்துகொள்ளும் பக்குவநிலையடையுமாறும் முயன்று வரவேண்டும். கருத்தைப் பொருளாக்கிப் பொருளை உருவாக்கி அவ்வுருவாகத் தான்மாறும் தன்மையுடையது மாந்தர் மனம். ஆதலால் இம்மனதில் எத்தகைய எண்ணங்கள் நிகழும் வண்ணம் பழகி வருகின்றோம் என்று சோர்விலாது காக்கவேண்டியது நம் கடன். ஒற்றுமைக்கிடனுய உரைகள் அதன்பால் உறைய உறைய அச்சொற்றொடர்கள் நாளடைவில் சில கருத்துக்களை உண்டாக்கி வைக்கும். பரமலோபியா யிருப்பவனும், ''உள்ளி உள்ளவெல்லாம் உவந்தீயும் வள்ளியோரென வழங்கின மேகமே'' என்ற கம்பரின் உரையை முதலில் சொல்லளவிலேனும் பயின்று வருவானாயின், மேகத்திற்கும் மனிதனுக்கும் அவ்வுவமை புகட்டிய ஒற்றுமையால், மேகமொன்றினை யாகாயத்தில் நோக்குங்கால் தன்னை யறியாமலே அவன் ஒவ்வொரு வேளை மேகத்தின் குணமாகிய வண்மையைத் தன்னோடு சேர்த்து நினைக்க நேர்வது இயல்பு. வரையிலாதீயும் வண்மையென்னும் ஓர் கருத்து மெள்ள மெள்ள அவன் மனதில் குடிபுகுகின்றது. இக்கருத்து வரவரத் தானும் சிறிது கொடுக்கவேண்டுமென்னும் நினைவாக மாறும். நினைவிருப்பினும், நெடுநாள் கொடாத வழக்கத்தால் எளிதிலே அந்நினைவை நிறைவேற்ற முற்படானவன் என்பது உண்மையே. எனினும் வண்மையெனும் பண்பின் கருத்து இப்பொழுது கொடையெண்ணமாகிய பொருளாகி மாறியேனும் நிற்கலாயிற்று. நினைவெதுவும் செயலென்னும் உருப்பெறாது நெடுங்காலந் தீர்வதில்லை வாய்மை இதுவாயின் பின்னொரு ஐயமேன். கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் ஒருநாள் சிறிதேனும் கொடைச் செயலேயாய உருவம் எடுத்துக் காட்டும் இவ்வுருப் பிறந்ததானால் வளர்வதுமாகும். வளர வளர அதனின் அழகிலே ஈடுபடுவனாகி நம் வச்சையன் பின்னாள், தன்னினின்று கொடுப்பது போக, முதற் கருத்தளித்த அப்புயலையே போலவும், முகிலனைய திருமேனி முகந்தனைப் போலவேயும், தன்னையே பிறர்க்கு நல்கும் தன்மையனுய் முடிதலும் கூடும். ஈவானல்லன் பிறகு, ஈகையே இவன்.

இலக்கிய மன்றினில் இக்கொள்கைக்குத் தத்தம் அனுபவம் கொண்டு சான்று சாற்றுவார், வாயாலோதியதும் காதால் கேட்டது மட்டோடு கழியாமற் காவியங்களை உணர்வோ டுருக்கி உண்டவர் யாவரும்.



காந்திமதி என்னும்

# காந்தாரநாட்டுக் கட்டழகி.

(225-வது பக்கத் தொடர்ச்சி)

## 11. களபலி.

மாதவியுடன் கலாநாதனை வீதிவாய்க் கண்ணுற்ற தனஞ்சயன் தனது வீட்டை நோக்கி நடக்கலாயினன். நடந்தவன் அவ்வழியிலே நகரத்தலைவர் சந்திரசேகர பிரபுவைச் சந்திக்க நேர்ந்தது. அவரும் இவனுடன் சொல்லொன்றிரண்டு பேசியகன்றார். அவர் சொன்னதைக் கேட்ட தனஞ்சயனது காலும் கையும் மனமும் எல்லாம் தளர்ந்தன. வீட்டிற்குப் போகவும் அவனுக்கு மனம் புகவில்லை. ''இந்த இழவிற்கு, ஈச்வரா என்னவழி தேடுவேன்,'' என்றேங்கித் திகைத்து நோக்கமெதுவு மின்றியே தெருத்தெருவாய்த் திரிந்திட்டான். 'ஊரை விட்டுச் சிறிதுகாலம் ஓடிப்போய் விட்டாலோ! என்று ஒருபோது எண்ணுவான். 'அப்புறம் அந்த மானக்கேட்டைப் பாஞ்சாலியினிடத்தில் மாற்றுவதெப்படி' என அவ்வெண்ணத்தை மாற்றுவான். இவ்வேழையின் உள்ளம் வெகுநேரம் இன்னவாறு ஊசலாடித் தவித்தபின் உந்திய அவன் எண்ணங்களும் சோர்வடைய நிலைக்கு வந்தது. அப்போது அவனுக்கு ஒரு உபாயம் தோன்ற வாடிய முகமலர்ந்து 'பித்தனே நான், இத்தனை நேரம் இது நினையாது தாழ்த்தேனே' என்று தன்னையே வைதனனாகி மீண்டும் கலாநாதனது மனைகருதிய வழிபற்றி அங்குப்போய்ச் சேர்ந்தான். மனையில் கலாநாதன் இல்லாதது அறிந்ததும் அவன் கருணாகரர் வீட்டிற்கே சென்றிருப்பானென்பதை யூகித்துச், 'சரி எப்படியாவது கலாநாதனைக் கண்டே தீரவேண்டும்' என்னும் தீர்மானத்துடன் தனஞ்சயன் அவ்விடமிருந்தே கருணாகரரது இல்லம் செல்லச் சிந்தித்துப் போகும் வழியில், கருணாகரர் உள்விடாது அகற்றியதால் வாடிய மனத்தினனாய்மீளும் கலாநாதன்எதிர்வருமவனைத் தூரத்திலேயே தெரிந்து, தானிருந்த மனநிலையில் யாரையும் சந்திக்க இசையாமல் ஒருபுற மொதுங்கி நிற்கத் தனஞ்சயனும் மேல்நடந் தேகிவிட்டனன். பிறகு அவன் கருணாகரரது வீடுவந்து சேர்ந்தபோது இரவு மணி எட்டிற்கதிகமிருக்கும். கருணாகரரைச் சூழ்ந்து சிலமாதர் குழுமி, வருந்துபவள்போல் ஒருத்தியும் இறும்பூது எய்தியவள்போல் ஒருத்தியும் தன்கடமையைத் தீர்க்கவேண்டுமே என்பாள்போல் ஒருத்தியும் 'என்னழகைப் பார்' என்று ஓதுவாள்போல் ஒருத்தியும் இன்னபல தன்மையில் தாழ்ந்த குரலிலும் உயர்ந்தகுரலிலும் அடுத்தும்தடுத்தும் பேசிக்கொண்டிருந்தனர். அன்னவர்க் கிடைபுகுந்த தனஞ்சயன் ''மங்கைமீர், என்ன வம்புவளர்த்து யார் குடியைக் கெடுக்கின்றீர்!'' எனச்சிரித்து, ''நல்லது, நானொரு விடுகதை வகுக்கின்றேன் அதை விடுப்பீரோ!'' எனவினவி ''இல்லை...வேண்டா......உங்களுக்குக் கோபம்வரும்..'' என்று நிறுத்தினன். அம்மாதர், ''சொல்வீர், அவ்விடுகதை சொல்வீர்'' என மேன்மேலும் வேண்டினர். ''ஆயின், இந்தத் 'தெரிவையர் கூட்டம் பாழ்நெற்றிக்குச் சமானமாவதெப்படி ?...என வொரு விடுகதை கற்பித்தான் தனஞ்சயன். ஆனால், பிறர் சொல்லிவிட்டால் தன்சாமர்த்தியம் விளங்காதென்றோ, மனதிலிருப்பது வாயில் தங்காத வெள்ளைக் குணத்தாலோ, சிறிதும் தாழாமல் அவன், தெரிவையர் திலகம் காந்தமதியை நீங்களிங்கே இட்டுவராததால் !'' என்று தானே விடுத்தும் விட்டான். சஞ்சலம் மாறிக் கருணாகரர் சிறிது சிரித்தாரெனினும் மறுபடியவர் புருவங்கள் நெறிந்தன. இவ்விடுகதையால் தமக்குற்ற இகழ்ச்சியையுணர்ந்த அம்மாதர், ''விடிந்தால் தெரிகிறது திலகம் படப்போகிற திண்டாட்டம்'' என்று துனியுடன் கூறித் தத்தம் வீடடைந்தனர்.

பெண்களகன்றதும் கருணாகரர் தனஞ்சயனை யழைத்துத் தன்னருகில் அமர்த்தித், ''தனஞ்சயா, நானுன்னை ஒருவிஷயம் வினவவேண்டி யிருக்கின்றது. விளையாடாமற் சொல்'' என்றனர்.

''இன்றைக்கு ஏனோ என்செய்கைகளெல்லாம் விளையாட்டாய்த் தோன்றினாலும் மனம் மாத்திரம் தடுமாறுகின்றது......தகரத்தில் துவக்கும் மொழியெல்லாம் தகனமாகவும் சகரமெல்லாம் சஞ்சனமுமாகவே மனதில் தொடர்ந்து முடிகின்றனவே !''

''என்ன தனஞ்சயா, மரணபயம் பிடித்துவிட்டதா உன்னை !''

''செ, சே! என்னுடைய சாவைக்குறிக்கும் நிமித்தங்களாக இவை இருப்பதற்கில்லை. ஜாதகம் எனது பலமான ஜாதகமாயிற்றே. வருந்தியழைத்தாலும் எமன் இன்னும் எழுபதுவருஷம் எட்டியும் பார்க்கமாட்டான். நான் சண்டைபோட்டுப் போட்டு எத்தனையோ பேரை வெட்டித் தள்ளுகின்றேனே அன்னவர்களது தகன சஞ்சனமாகத்தான் இருக்கும்.''

''இந்தத் தற்புகழ்ச்சி யெதற்கப்பா தனஞ்சயா, அதுவும் என்னிடத்தில்! நீ போட்டுப் போட்டு வருகிற சண்டையில் ஒன்றுவது நீ நிசமாய்ப் போட்டிருப்பாயானால் உன் ஜாதகமெல்லாம் பஞ்சாய்ப்பறந்து போயிருக்குமே. ......இருக்கட்டும்......உன் நண்பன் கலாநாதன்மீது இப்பொழுது ஒருசங்கை யேற்பட்டிருக்கின்றது. அதை நீ நிவர்த்திசெய்வாயோ ?''

''என்ன சங்கை யது ! எதாயிருப்பினும் ஆதாரமில்லை யென்று என் உள்நாக்குவரையிலும் எட்டச் சத்தியம் செய்வேன். எனக்குச் சம வீரனான கலாநாதனை நான் விட்டுக் கொடுப்பேனோ !''

''தனஞ்சயா, அவசரப்படாதே, நீ கலாநாதனை இந்தச் சமயம் காப்பாற்றக் கூடியவனாயிருக்கலாம்......உன் புத்தியின் திறமையை நம்பி உன்னுடன் கலந்து நான் இப்பொழுது யோசிக்க வருகின்றேனென்று எண்ணி மகிழ்ந்து போகாமல், ........''

''கருணாகரரே, நீரென்னை அசடன் என்று மதிப்பதற்குக் காரணம் தெரியும். உம்போன்ற யோகிகள் என்போன்ற போகிகளை மதியீனரென்றுதான் மதிப்பார்...........''

''இந்தயோகி போகியெல்லாம் ஒருபக்கமிருக்கட்டும். ......கலாநாதனுக்கும் என்மகளுக்கும் காதல் வளர்ந்து வந்ததென்பது உனக்குத் தெரியுமல்லவா.''

''ஆம், இன்றுகாலை நகரத்தார் கூட்டதிற்கு நானவனை அழைக்க இங்கு வந்தபோது வளர்ந்த காதலைப் பழுக்கவைத்துக் கொண்டிருந்தான் என்பதும் தெரியும் ......ஆகா, காந்தார நாட்டுக் கட்டழகியின் கையைப் பிடிப்பவனல்லனோ பாக்கியசாலி !''

''தனஞ்சயா, கேள். நீ வரும்போது இங்குக் கூடியிருந்த மாதர் ஊர் வம்பையெல்லாம் தம் வேலையாய்ப் பாவித்துக் கலாநாதன் பாண்மகள் ஒருத்தியுடன் தெருவழியே சென்றதைப் பார்த்ததாகச் சொல்லினர். அதன்

முன்னரே தாமோதரனும், கலாநாதன் தன் தங்கையைக் கூட்டிச் சென்றானென்று ஏனோ என் வீடு தேடிவந்து சொல்லிப் போனான். இவ்விருவழியாலும் அந்த வதந்தி எனக்கு எட்டி யிராவிட்டால் ஒன்றையும் நம்பியிரேன். காந்தியும் மனமுளைந்து மேன்மாடி சென்று படுத்துவிட்டனள். நீ வருவதற்குச் சிறிது நேரத்திற்குமுன் கலாநாதன் வந்து கதவைத் தட்டினான். 'வீட்டில் நீ விட்டிருக்கின்ற வேசியோடு உசாவப் போ' என்று சினந்து, அவன் பதிலுரைப்பதற்கு முன்பே கதவை அடைத்துவிட்டேன். கலாநாதனோ தீயநடக்கை உடையவனல்லன். நான் முன்கோபத்தால் அவன் பதில் பேச இடங் கொடுக்காது துரத்திவிட்டது தவறு என்று இப்பொழுது தெரிகிறது. நல்லது, தனஞ்சயா உனக்கேதேனும் இதைப்பற்றித் தெரியுமோ? நீயுமவளைப் பார்த்ததுண்டென்று தாமோரன் சொன்னான்'

"நானவளைப் பார்த்தேனா! கருணாகரரே, நானவளைப் பார்த்தேனென்று தாமோதரன் சொன்னானா ?"

"ஆம்."

"அதுபொய். இதோ அந்த வைத்தியக் கிழத்தை இழுத்து வந்து ரூபிக்கின்றேன் பாருங்கள் !" என்று எவ்வழியிலேனும் அவ்விடம்விட்டுப் போய்விடக்கருதித் தனஞ்சயன் எழுந்தான். தாமோதரன் தன்னிடத்தில் சொன்னவைகளில் தனஞ்சயனும் கலாநாதனைப் பாண்மகளுடன் பார்த்தேனென்று அவனிடம் சொன்னதாகச் சொன்னதும் ஒன்றாதலால், இது வொன்று பொய்யானால் எல்லாம் பொய்யென்று வைத்தியன் வார்த்தைக்குப் பதம் பார்க்கவே கருணாகார் தனஞ்சயனை இவ்வாறு விசாரிக்க அவன், 'அதுபொய்' என்றதும் அவர் வெகு சந்தோஷமடைந்து, "ஆனால் நீயப்படியொன்றும் பார்த்ததாகத் தாமோதரனிடம் சொன்னதில்லையே," என்று ஆர்வத்துடன், செல்ல எழுந்தவனை இழுத்துத் தன்னருகில் மீண்டும் உட்காரவைத்துக் கொண்டார். ஆனாலென்ன ! இத்தையற்காரன் அவரடைந்த சந்தோஷத்தைக் காற்றுக் கொப்புளம் போல் ஒரு நொடியில் குத்தி யுடைத்துவிடாமலு மிருப்பானோ! எனவே அவன் இமையளவு தாழாமல்,

"நான் சொல்லியிருந்தால் தான் என்ன! அப்பாதகன் யாருக்கு மதை வெளியிடுவதில்லை யென்று சத்தியம் செய்தானே. ஆகையால், உம்மொடு சொல்லிவிட்ட வகையில் அவன் அசத்தியன் ஆகிறான். அவனை நம்புவதெப்படி" என்றான். வைத்தியன் நம்பத்தகுந்தவனல்லாத அசத்தியனென்று ரூபிக்கத் தனஞ்சயன் கையாண்ட தர்க்கம் கருணாகாருக்குக் கலக்கத்தைத் தந்தது. இருப்பினும் அவர் இம் முரணையும் பொருட் படுத்தாது, "எனின், வதந்தி பொய் என்கிறாய். கலாநாதன் பாணத்தியுடன் போக நீ பார்க்கவேயில்லை !" என்று கூறினார்.

"அடெ டெ ! நானா, பார்த்தேனோ என்னவோ !... பார்க்கவில்லையோ என்னவோ ! கருணாகரரே, நானோ விவாகமாகி மனைவியுடன் ஐந்து வருஷம் வாழ்ந்து விட்டவன். இனி, இந்தக் குறத்தியின் கால் நடையும் கண்மினுக்கும் பக்கத்தில் வந்த நாயின் சாதியும் எனக்கெப்படி நினைவிலிருக்கும்......நான் யாரையும் கண்ணெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை..."

"இதற் கெல்லால் முடிவு என்ன வென்றால்......இந்நான் மாலை நீ யவனைத் தெருவீதியில்......"

"இல்லை, இல்லை. கருணாகரரே, ...... சிறியதொரு சந்தில் தான் ...... அந்த நாடோடிச் சிறுமியும் நல்ல அழகியே."

கருணாகாருக்கு இனி என்ன சந்தேகம் இருக்கக் கூடும். "அடெ காதல்துரோகி, கலாநாதா ! இரதி பௌர்ணிமி இம்மங்கள நாளிலே காலையில் உத்தமி ஒருத்தியை மணம் வினவி மாலையிலே பரத்தையைப் பிடித்துச்செல்வதா ! கண்ணியமும் காதலும் துறந்து காமுகப் பேயனாய கம்மியா, என்னரும் புதல்வி நின் புழுத்த கையைத் தீண்டு வதிலும் அப்பெருங்குன்ற மூர்க்கன் கந்தனோடு குகையிலே வாழலாமே......" என்று அவர் பதறக்கண்டு தனஞ்சயன், "ஐய, இளவயதில் இவ்வித வழுக்கள் இரண்டொன்றிருந்தால்தான் என்ன, குடிமுழுகிவிடுமா. பொழுதுவிடிந்தால் அவளெங்கேயோ இவனெங்கேயோ......கருணாகரரே, குற்றம்பார்க்கச் சுத்தம் ஏது!" என்று தானறிந்தபடி பழமொழிகளும் சொல்லி அவரைத்தேற்ற வெகு பாடுபட்டுச் சொன்ன சொற்கள் ஏறஏறப் பின்னும் கோபம் மூண்டவராய், "அந்தப்படுகொலைக்காதகன் அவளை வீட்டிலே வைத்து வந்து என் வாயிற்படியையும் கடந்துவரத் துணிந்தனனே ! என்னென்றுரைப்பது...... அவனை என்னசெய்தால் தீரும்! .........சரி, தனஞ்சயா, உன்னையும் ஒருமனுஷன் என்று வைத்துக்கொண்டு பேசுகிற எனக்கு எத்தனை புத்தி! சி! கழுதை யுராயும் குட்டிச்சுவரே, எழுந்துபோ!

வாயில்வந்ததைக் கொட்டிக்கிளறிக் கலாநாதனுக்குப் பொரும் பொல்லாங்கு செய்துவைக்கின்றானென்பது இப்பொழுதுதான் தையற்காரன் மனதில் மெள்ளமெள்ளத் தைக்கலாயிற்று. ஒரு அசட்டுத்தனம் செய்துவிட்டால் அதைமூடுவதற்குத்தலைப்பட்டுப் பின்னும் அசட்டுக் காரியம் ஆயிரம் பண்ணி அவஸ்தைக்கு ஆளாவது மனிதற்கியல்பு. அசடர்களுக்கெல்லாம் அச்சாணியாய தனஞ்சயன் கலாநாதனது துர்நடத்தைக்குச் சமாதானம் சிருஷ்டிக்கப் புகுந்தவனாய், "ஐயா, கருணாகரரே, கலாநாதன் பெண்ணொருத்தியை வீட்டிற்கு அழைத்துச் சென்றதற்கா இத்தனை கோபமும் பகையும் பாராட்டுகின்றீர். அவனுக்கு இந்தக் குணம் எப்பொழுதுமே சிறிதுண்டு என்பது நீரறியாததோ ! பால்யத்தில் எல்லாப் புருஷர்களு மப்படித்தான் ஒரு முப்பது வருஷங்களுக்கு முன்னால் நீர்தா னெப்படி என்று சிந்தித்துப் பாரும். விவாகமாய்விட்டால் எல்லாரும் ஆடிப்பாடித் தன்னிலைக்கு ஒய்ந்துவிடுவார்கள்......சொல்லவேண்டாமென்று பார்த்தேன்......உங்களிடம் சொல்வதற்கென்ன......என் பாஞ்சாலிக்கு என்னகுறை ஐந்து வருஷத்திற்கு மேலுமாகிவிட்டது. இருந்தாலும்...... என்ன......இருந்தாலும்....நான் இப்பொழுதுகூட..."

"சீ ! சி ! நிறுத்து. எனக்குமா வைத்தாய் வழி! உன் போர் வெற்றியைப் போலவே பெண்ணாசையும் மாயையே ! பொய்யையே விரதமாய்க் கொண்டிருந்தாலும் ஏ, புல்லியா, உனக்குப் பெருமையாகவாவது பொய்சொல்லிக்கொள்ளக் கூடாதா ! ஊசிபோகிற வழி நூலோட்டிக்கந்தை சேர்க்கும் வைத்தியமே, இந்தச்சொல் உன் பாஞ்சாலியின் செவியில் படுமானால் பிறகு உன் வீட்டு வாயிற்படி தாண்டி உள்நுழைந்து பிழைப்பாயா !'!

"ஐயா, ஏன் அப்படிச் சொல்கின்றீர். எனக்கும் என் மனைவிக்கும் மிக்க பொருத்தம் உண்டே !"

"என்ன பொருத்தமோ ! பேர்ப் பொருத்தம் தவிர வேறெந்தப் பொருத்தமும் இருப்பதாக இவ்வூரார் அறியார் !"

"நான் ஒருதரம் சினந்து நோக்கினால் அப்படியே அவள் பட்டைப்போல் துவண்டு விடுவாளே. என் சுதந்தரங்களுக்கு மாறாய்க் கைவிரலைக்கூட அசைக்காளவள். ......என்ன, எனக்கு மனைவியை அடக்கியாளத் தெரியாதென்று எண்ணியிருக்கின்றீரோ !



"ஆமடா அப்பா, சரி. ஆனால், அந்த நனாயினிடம் நாள்போய் நீகலாநாதன்மீது சொல்லிவந்த குறளைக்கெல்லாம் பதிலாய் இப்பொழுது இங்கு நீ வெளியிட்டவைகளைச் சொல்லியே மறுகாரியம் பார்க்கின்றேன் பார்... ...உம். நீயும்வா போவோம்' என்று எழுந்தார் கருணாகரர்.

தனஞ்சயன் தேள்கொட்டினது போல் குதித்தான். அவன் தோண்டியது குட்டையே யாக அதனின்று, 'பெண்டாட்டி இடம் சொல்லிவிடுவேன்' எனும் வீமப்பூதம் புறப்படும் என்றவன் எண்ணவேயில்லை. இந்த ஆபத்திலிருந்து தப்புவதற்கு ஒரு வழிதான். "கருணாகரரே, நீரோ வயதானவர். என் தந்தையாவீர். நீங்கள் என்னை எவ்வளவு வைதாலும் வையலாம். மனைவியிடத்தில் சொல்லி எங்கள் கிரகசித்திரத்தை மாத்திரம் கலைத்து விடவேண்டாம்," என்று வேண்டினன்.

"ஓடு இந்த வீட்டைவிட்டு. ஏ, கழுதை, மடயா, புத்திகெட்ட கடாவே. ஓடு!" என்றிரக்கமில்லாது கருணாகரர் துரத்தினர். தனஞ்சயனுக்குத் துக்கம் நெஞ்சை யடைத்தது. பாவம் என்ன செய்வான். "என் மேலேன் இத்தனை கோபமோ ! காலையில்தான் உமது வீடு கொள்ளைபோகாமல் காப்பாற்றினேனெனும் நன்றி கூடவா மறக்கவேண்டும்." என்று சொல்லித் தொங்கிய தலையுடன் போய்விட்டான்.

கருணாகரர் தனஞ்சயனை இன்னவாறு வைததெல்லாம், அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்ததன்று. அங்கத்திற்கு ஐந்நூறு பொய் வளர்க்கும் இந்தப் பித்தன் அதனில் ஒரு பொய்சொல்லிக் கலாநாதனைச் சந்தேகத்திலிருந்து விடுவித்திருக்கலாகாதா எனும் கோபம்தான் அப்படியவர் நல்லொழுக்கத்தையும் இழந்து நிர்க்கதியான தனஞ்சயனை வைததற்குக் காரணம். ஆனால் அவன் போனபிறகு அவர்க்குத் தனஞ்சயன்பால் இரக்கமும் கலாநாதனை நினைக்கக் கோபமும் அதிகமாயின. "பாவம், அவனையேன் அப்படி வைதேன். பொய் சொல்லி மறைக்கவே முயன்றான். இருந்தாலும் அந்த வெள்ளை மனதில் கள்ளம் தங்கவில்லை. ஐயோ, பாவம். எதிருரைக்கமாட்டாமல் மிக வருந்தியிருப்பான்...... நாளைக்குப்போய் விளையாட்டிற்குத்தான் வைதேனென்றால் நம்பியும் விடுவான்......பொழுதுவிடிந்ததும் போயவனைச் சமாதானப்படுத்தவேண்டும்... .....பொய்யாவது சொல்லிக் கலாநாதனைக் காத்திருக்கவேண்டுமென்பது என்ன நியாயம். அட, துஷ்டா, கம்மியப்பதரே, உன் புத்தியேனடா இப்படி அவலமாயிற்று ! உன்னிற் சிறந்த கணவனில்லை என்று என்று ஒதிய என்னைக் காந்திதான் இனி மதிப்பாளா. போ! போ ! என் வரையில் இனி நீ செத்தாய் !" எனப் பலவாறு தன்னுள் சிந்தித்தவராய்க் கருணாகரர் படுக்கையறைக்குட் புகுந்தார்.

T. N. சேஷாசலம்.

# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

(முன் தொடர்ச்சி—பக்கம் 227)

### நக்கீரர் திருமறம்.

**தொடர்நிலைச் செய்யுள் :**—கண்ணப்பர் கதையைத் தனிப் பாடல்களில் குறித்துப் போகாது சேக்கிழாரைப் போல விரித்துரைக்கும் நூல்களையும் ஒரு சிறிது ஆராய்ந்து ஒப்பு நோக்குதல் வேண்டும். அத்தகைய நூல்கள் தமிழிலே பழைய நாள் தொடங்கிப் பல நிலவி வருகின்றன. நக்கீரர் எழுதியதாகப் பதினோராந் திருமுறையில் காணப்படும் திருக் கண்ணப்பர் திருமறம் ஒன்று ; அத்திருமுறையிலேயே கல்லாடனார் பாடியதாக வழங்கும் மற்றோர் திருமறம் இரண்டு; ஆனந்தக் கூத்தர் பாடிய திருக்காளத்தி புராணத்தில் காணக் கிடக்கும் "கண்ணப்பர் சிவகோசரியார் முத்தியடைந்த அத்தியாயம்" மூன்று ; சீகாளத்தி புராணத்தில் சிவப்பிரகாசர் பாடியருளிய "கண்ணப்பர் சருக்கம்" நான்கு. இந்த நான்குமே இவ்வகையில் சிறந்து விளங்குகின்றன.

இவற்றிலே இப்பொழுது யாம் ஆராயவேண்டுவன நக்கீரர் திருமறமும் கல்லாடனார் திருமறமுமேயாகும். திருக்காளத்தி புராணம் கூறிப்போவது சேக்கிழார் கதையின் சுருக்கமேயாகும். சீகாளத்தி புராணமும் பெரும்பான்மையும் பெரிய புராணத்தைத் தழுவியே செல்கின்றது. இவ்விரண்டு புராணமும் பெரிய புராணத்திற்குப் பின்னர் எழுந்தவையாகும். ஆகவே சேக்கிழார் கதையினை ஆராய்ந்த பின்னரே இவற்றை ஆராய்ந்து முடிந்தது முடித்தலாக ஒத்து நோக்கவேண்டும். நக்கீரனார் திருமறமும் கல்லாடனார் திருமறமும் சேக்கிழார்க்கு முன்னிருந்தோர் எழுதியவை; ஆதலின் அவற்றை முன்னர் ஆராய்வதால் சேக்கிழார் நூலுக்கும் இவற்றிற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை நன்கு புலனாகும். அன்றியும், முன்னோர் நூலினைப் பின்னோர் எங்ஙனம் பெரிதும் பயன்படுத்திக் கொண்டனர் என்பதும் வெளியாகும். எனவே சேக்கிழார் படிந்து திளைத்து இன்பந் துய்ப்பதற்கு முதனூலாய் இருந்தன இவை என்பதனை ஆராயும் வகையிலேயே, நின்ற நிலையினையும் நோக்க வேறுபாட்டையும் குறித்துப் போவதே எமது நோக்கம் என்க. இத்திருமறம் இரண்டும் பல அடிகள் கொண்டு விளங்கினாலும் ஒவ்வொரு பாவாகவே எண்ணப்படுதலினால், தனிப்பாடல்களோடு ஒருங்குவைத்து ஆராயத் தக்கவையாம். எனவே முன்னைய பகுதியோடு பின்னைய பகுதி பெரிதும் தொடர்புடைய தென்க.

நக்கீரர் பின்வருமாறு தமது நூலில் கூறிச் செல்கின்றார். திருக்கண்ணப்பரது சிறந்த தவச்செய்கையைக் கேட்பதில் உலகத்தினருக்கு விருப்பம் மிகுதியும் உண்டு என்கின்றார். ஆதலினால் அக்கதையினை விரித்துரைப்பதும் வேண்டற் பாலதே என்று கருதி இக்கதையினைச் சொல்லிப்போகத் தொடங்குகின்றார்.

இத்தகைய பெருந்தவம் செய்தார் பிறந்த குடிதான் யாது ? காட்டில் திரியும் வேட்டுவர் குடியே ? அதிலும் எத்தகைய வேட்டுவக்குடி ? தேன் கூடு எங்குக் கட்டி இருக்கின்றதோ என்று தேடிச்சென்று தீக்கோல் கொண்டு தேனீக்களைத் தேய்த்துத் தீய்த்துத் தேனடைகளை அழித்துத் தேனினைக்கொண்டு வரும் கொலையாளி வேடர்கள். உண்ண வேறொரு உணவுமின்றித் தாம் வேட்டையாடிக் கொன்ற விலங்குகளின் தசையைத் தீயிற்சுட்டு வதக்கித் தேனிற் றோய்த்துத் தோய்த்துத் தின்னும் திண்ணிய வேடர்கள். நீர் என்பது சிறிதும் பெறாது தேனையே குடிக்கும் திருட்டு வேடர்கள். இவ்வாறு தேய்த்தும் தீய்த்தும் கொன்றும்சுட்டும் குடித்தும் களித்தும் செருக்கித் திரிந்து காட்டில் வாழ்வதால் மூர

டரான வேடர்களது குடியில் தான் திருக்கண்ணப்பர் பிறந்தார்.

**நாடு:**—பிறந்த குடி இதுவானால் இருந்த நாடு யாது? நாடோ காடுதான். அவர் திரிந்து வாழும் இடமோ பெருங்காடு. அதிலும் மலையடர்ந்ததொரு பாலைவனம். அங்கே எப்போது நின்று கேட்டாலும் ஒரு புலியேனும் பசிக்கிரங்கிக் குமுறிக்கிடக்கக் கேட்கலாம் அக்காட்டில் அவருக்கு அருந்துணை யாவார் யார்? நாயன்றி வேறு ஒருவரும் இல்லை. அந்நாயோ சினத்தான் சிவந்து நெருப்புப்பொறி பறக்கும் கண்கொண்டு விளங்குவது. அதுவே அனைவரும் அஞ்சும் அந்த வனத்தில் அறுபது நாழிகையும் அவருடனிருந்து அவரது நிழல்போல் திரிவது. பார்வை விலங்குகளும் பக்கத்தே இருந்தன. ஆனால் அவையும் கொலைத் தொழிலில் துணையாய் இருப்பனவேயாம். மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல, விலங்குகளைப் பிடிப்பதற்காக அவ்விலங் கினத்திலும் ஒவ்வொரு பார்வை விலங்கினை வளர்த்து வந்தார். அவர் பழகுவதுதான் என்ன? விசையுடன் வளைந்து, "ரய் ரய்" என்று அம்பினை விட்டுக் கொன்று குவிக்கும் கொடிய வில்லும், வெட்டொன்று துண்டு இரண்டு என்று கொத்தித் தள்ளும் கூரிய வாளும், குத்திய குத்தின்முன்னே குடல்சரிந்து வெளிவரப் பின்னே முதுகுவரை உருவிச்சென்று வெளிப்படும் வேலும் முதலான கணக்கு வழக்கில்லாத கொடும் படைகளைத்தான் நாளும் பயின்று வந்தார். வேறொன்றும் பயின்றவர் அல்லர். குடியிருக்கும் வீடும் கொலைக்களமே. அவர் வீட்டில் இங்கும் அங்கும் இறைச்சித் துண்டுகள் விழுந்து கிடக்கின்றன. கொலைக்கேற்ற குடியும் உண்டு. குடம் குடமாகக் கொம்புத்தேன் குடித்ததும் மிகுந்ததுமாக எங்கும் இருக்கின்றது. தசையும் கொழுப்பும் ஒட்டிக் கிடக்கும் வாளும் அம்பும் தரையில் சிதறுண்டு கிடக்கின்றன. ஒழுங்கோ அமைதியோ, ஒன்றும் இல்லை. அண்ட நிழல் இல்லாத அவ்வனற் காட்டில் அவர் ஒதுங்கிவாழும் சிறு குடிசையின் கூரை எவ்வாறிருக்கும். உலர்ந்துபோன விழல் நாணல் முதலியவற்றை மேலே பரப்பிக் கூரை என்று வைத்துள்ளார். அக்காடெல்லாம் வெட்டி வந்தாலும் அவ்விழலும் நாணலும் அச்சிறு கூரைக்கும் போதவில்லை. ஆகவே மயிற் பீலிகொண்டு இடைவெளி எல்லாம் மூடி வைத்துள்ளார்.

அவரது தொழில்தான் என்ன? வெட்ட வெளியில் உலாவவரும் விலங்குகளைப் பிடித்துத்தின்னப் பேரவாக் கொண்டு வலையை விரித்து, அவற்றிற்கு அவ்வலை தெரியாதபடி புலித் தோல் போர்த்து மூடுகின்றார். அந்தோ பட்டினிகிடத்தற்கு அஞ்சி இரவும்பகலும் அவ்வலையைப் பழுது பார்த்துச் சரிசெய்து வைக்கின்றார். அவ்வெட்ட வெளிக்குள் விலங்குகள் வந்து சிக்கிக் கொண்டால் அதோடு விட்டு விடுவாரா? தமது கொடிய நாயை அவற்றின் மேல் ஏவி விட்டுத் தெறுத்துவார். ஆணும் பெண்ணும், குட்டியும் குஞ்சுமாகத் தொன்றுதொட்டு உலகில் உலவிவரும் உயிர்கள் அடங்கலையும் "விர் விர்" என வில்லை வளைத்து அம்பினை ஏவி எய்தும், சுரிகைக் கத்தியால் ஓங்கி ஓங்கிக் குத்தியும், எங்கும் ஓடி அவற்றின் பூண்டும் இன்றிப் போகக் கொன்று குவிப்பதே அவரது தொழில்.

அவரது வடிவோ அஞ்சத்தக்கது. காணக் கண் நடுங்கும். வலிய புலியொடு எதிர்நின்று சண்டையிடுகையில் அவரது கைக்குள் சிக்கி நோய் பொறுக்கமாட்டாது அப்புலி தன் பல் ஆழ்ந்து பதியக் கடித்துவிட்ட வடு குழிந்து முன்னங் கையில் இன்னும் தோன்றுகிறது. கல்லைப்போன்ற வலிய மார்பை மாற்றாது வாளும் வேலும் அம்பும் கொம்பும் கிழித்தெறிந்ததால் எழுந்த தழும்பு தடித்துப் போய் உள்ளது. கூரிய பல்லினையுடைய காடி வெகுண்டெழுந்து கடித்துப் பிய்த்துக் கொண்டு போனது, நெற்றியில் ஒருபுறத்தில் மூளியாய்ப் பள்ளமாகத் தோன்றுகின்றது. யானை தனது கொம்பால் அவரது தொடையிலே முட்டிக் குத்திவிட தொடை எலும்பு பிதுங்கி முன்வந்து மேலே தூக்கிக் கொண்டு இருக்கின்றது. தலைமயிரோ புதர்போல எழுந்து நிற்கின்றது. கண்ணோ செவ செவ எனச் சினத்தாலும் குடியாலும் சிவந்துள்ளன.

இனிமைஎன்பது எள்ளளவும் இன்றிக் "கடுகடு" என்று சீறி விழுந்து பேசுகின்றார். ஓர் இமைப் பொழுதேனும் கொல்லும் படைகளை அப்புறம் வைத்த பாடில்லை. அவர் மனமோ கல்லினும் கடிது (நகையாடி நறுக்கு நறுக்கு என நூற்றுக் கணக்காய்ப் பேன்களைக் குத்திய பின்னும் இன்னும் அகப்படாவா என்று தலை பார்த்துத் திரியும் நங்கையரைப் போலக்) கும்பல் கும்பலாகக் கொன்று குவிக்கும் வேட்டையில் அகப்படும் பல வுயிர்களையும் பதைக்கப் பதைக்கக் கொன்றும், அவை பதைப்பது கண்டு களிப்பதற்காகத் தலைவேறாகவும் கால் வேறாகவும் உடல் வேறாகவும் சிறுகச் சிறுகத் துண்டுதுண்டாக வெட்டியும், அவை நடுநடுங்கி ஓலமிட்டுத் துள்ளித் துள்ளிக் குற்றுயிராய்க் குதிப்பது கண்டு கைகொட்டிச் சிரித்தும் களிப்பவர். இன்னும் கொன்று குவித்து வெட்டி விளையாட விலங்குகள் வெளிவராவோ என்று இரங்குவார். அத்தகையது அவரது உள்ள நிலை. இதுவே அக்கானத் தலைவர் தன்மை.

**அன்புநிலை—நிகழ்பு:**—ஆனால் மங்கை பங்காளனும் வானத்தலைவனிடம் அவர் செல்லுமளவில் முற்றும் மாறி விடுகின்றார். தாயைக் காணாவிடின் பாலுண்ணாது பட்டினி கிடக்கும் பச்சிளங்கன்று தாய்ப்பசுவைத் தூரத்தே வரக்கண்டாலும் "அம்மா" எனக் கூவிக் கொண்டே குதித்தோடுவது போல, இறைவனிடம் அன்போடும் சென்று அறவாழி அந்தணனின் அழகிய மலரடியை அன்றாடும் வணங்கி வருகின்றார். இறைவனது திருவடியைச் சென்று கண்டல்லது ஒருபருக்கையும் வாயில் இடார்-(இது என்னே வியப்பு?)

இவ்வாறாக அவரது கொலைச் செய்கையினையும் தவச் செய்கையினையும் கண்டு வியந்து பாடிப் பின் அவர் செய்த வழி பாட்டை விரித்துரைக்கின்றார் நக்கீரனார்.

**வழிபாட்டிற் கேற்பாடு:**—கொதிக்கின்றான் கதிரவன் என்று வெங்கதிர்களை விரிக்காதபடி குண்டுகட்டாகக் கட்டப்பட்ட ஞாயிறு சிறுகச்சிறுகத் தன் கட்டினை அவிழ்த்துக்கொண்டு உச்சிவந்ததும் தன் வெங்கதிர்கள் முழுவதினையும் விரித்துக்கொண்டு நெருப்பென மேல் காய்கின்றான். பாலைவனத்தில் அடிஎடுத்து வைக்குந்தோறும் சுறீல் சுறீல் எனக் கால்பற்றிக்கொள்ளவே கொப்புளம் கொள்கின்றன. வற்றியுலர்ந்த மரங்கள் சுற்றிலும் சூழ்ந்திருக்கும் வெளியிடத்தில் விலங்குகளைப் பிடிப்பதற்காக அவ்வவ் வினைத்திலும் ஒவ்வொன்றாகப் பழக்கி வைத்திருக்கும் பார்வை விலங்குகளைப் பக்கமெல்லாம் பரவி ஓடவிட்டுச் சந்து பொந்துகளில் பதுங்கி இருக்கும் விலங்குகளை எழுப்பி ஏமாற்றிக்கொண்டு வரச் செய்கின்றார். அவ்வாறு வெளிவந்தவற்றின் மேலே நாயானதுபோய் மேல்விழுந்து கௌவிப் பிடித்துக் கடித்துத் தள்ளுதலால் அவை திக்குமுக்கலாடித் திகைப்புல் மிதித்தாற்போல மயங்கி நாலாப் பக்கமும் ஓடுகின்றன. அம்பு விட்டெய்து அவற்றினைத் துண்டு துண்டாகக் கொத்துகின்றார். விறகு கொண்டு கடைந்து



தளதளவென்று நெருப்புண்டாக்கி, அந்நெருப்பில் இறைச்சியைச் சுட்டு எடுக்கின்றார். கொத்திய அத்தசைகளில் நல்லனவற்றை நாவில் இட்டு நன்றாகச் சுவை பார்த்துச் சிறந்தனவற்றை இறைவனுக்கென்று வேறு பிரித்து எடுத்துக் கொள்கின்றார். "தண்" என்றிருக்கும் இனிய சுனைநீரை வாயே குடமாக முகந்துகொண்டு, உள்விழுங்காது அச்சத்தோடும் ஆர்வத்தோடும், வாயிலேயே வைத்துக்கொண்டு வழி நடக்கின்றார். காட்டுப் பூவைக் கைநிறையப் பறித்துத் தலை கொள்ளுமட்டும் செருகிக் கொள்கின்றார். வளைத்த வில்லோடும் கூரிய அம்பினைத் தம் கையிலேந்தி வருகின்றார். நெருப்புப்போன்றெரியும் கண்ணோடு 'லொள் லொள்' என்று கேட்டோரும் கண்டோரும் அஞ்சி நடுங்குமாறு குரைத்துக்கொண்டே அவரது நாயானது அவர் பின்னே ஓடோடியும் வருகிறது. கண்ணப்பரும் மலைமேலேறுகின்றார்.

**மறையவர் வழிபாடு:**—முன்னாகவே இறைவனை நாள்தோறும் வந்து வழிபட்டுப் போகும் மறையவர் பழமைபோலவே மலைமேல் வந்து தூய்மையான நீர் கொண்டு திருமஞ்சன மாட்டினார், நறும்புகையூட்டினார், நல்விளக்கேற்றினார், பட்டாடை சூட்டினார், பட்டமாலையைப் பரக்கச் சாத்தினார். தூக்கமாலையைத் தொங்கவிட்டார். இடையிடையே உதிரிப் பூக்களை ஒவ்வொன்றாக அழகுபடச்செருகினார். இவ்வாறெல்லாம் அழகிய ஒப்பனையைச் செய்துமுடித்தார். இறைவனை வழிபடு முறையை எடுத்துக் கூறும் நூல்கள் சொல்லியபடி எல்லாம், ஒன்றும் குறையாதும் தவறாதும் செய்தார். போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங்கினார். முத்திரைகளைக் காட்டினார். மந்திரம் ஓதினார். வலமிடமாகச் சுற்றிவந்தார். இறைவனிடம் விடைகொண்டு இல்லம்போய்ச் சேர்ந்தார்.

இந்தத் தறுவாயில் மலையேறிய கண்ணப்பர் கடவுளிடம் வருகிறார். அவ்வந்தணர் அழகுபடச் சாத்தியவற்றை எல்லாம் ஒரு செருப்படியால் உதைத்துத் தள்ளுகின்றார். வாயில் முகந்துவந்த இனியநீரை இறைவனது திருமேனியில் உமிழ்கின்றார். தலையிற்செருகி வந்த காட்டுப்பூவைத் திருமுடியிற் சாத்துகின்றார். இறைச்சியை இறைவன் எதிரே வைத்துப் படைக்கின்றார். எம்பெருமானைக் கண்டுகண்டு உள்ளங் கசிந்துகசிந்து உருகுகின்றார். அன்பினால் தன்னையும் மறந்து குதித்துக் கூத்தாடுகின்றார். திருவடியை அன்பினால் இறுகத் தழுவிக் கொள்ளுகிறார். ஆரா அன்பொடும் இறைவனை நினைந்துருகிய வண்ணமாய்க் கானகம் திரும்புகின்றார்.

டி. பி. மீனாக்ஷிசுந்தரன்.

# தமிழ்ப் பாடம் 13.

## நள வெண்பா

(231-வது பக்கத் தொடர்ச்சி)

### சுயம்வர காண்டம்.

வழிமேல் விழிவைத்து வாணுதலா ணாம
மொழிமேற் செவிவைத்து மோகச்—சுழிமேற்றன்
நெஞ்சோட வைத்தயர்வான் கண்டா னெடுவானில்
மஞ்சோட வன்னம் வர. 49

**பதப்பிரிவு:**—வழிமேல் விழி வைத்து வாள் நுதலாள் நாம மொழிமேல் செவி வைத்து மோக சுழிமேல் தன் நெஞ்சு ஓடவைத்து அயர்வான் கண்டான் நெடு வானில் மஞ்சு ஓட அன்னம் வர.

**அன்வயம்:**—... .....அயர்வான் நெடுவானில் மஞ்சு ஓட அன்னம் வரக் கண்டான்.

**கருத்து:**—கலங்கிய உள்ளத்தனாய்ச் சோலையில் காத்திருந்த நளன் அன்னம் மீண்டு வருவதைக் கண்டான்.

**பதவுரை.**

வழிமேல் - (அன்னம் வரவேண்டிய) வழியின் மேல்
விழி - தனது பார்வையை
வைத்து - (நீக்காமல்) செலுத்தியும்,
வாள் - ஒளிபொருந்திய
நுதலாள் - நெற்றியையுடைய தமயந்தியின்
நாமம் - பேராகிய
மொழிமேல் - சொல்லின்மேல்
செவி - (தனது) காதுகளை
வைத்து - நிறுத்தியும்,
மோகம் - மோகமென்னும்
சுழிமேல் - சுழியின்மேல்
தன் - தன்னுடைய
நெஞ்சு - மனதை
ஓட - அலையும்படி
வைத்து - வைத்தும்
அயர்வான் - சோர்பவனாகிய நளன்,
நெடு - பெரிய
வானில் - ஆகாயத்தில்
மஞ்சு - வெண்மேகங்கள்
ஓட - போகவும்
அன்னம் - அன்னமானது
வர - வரவும்
கண்டான் - பார்த்தான்.

**விளக்கம்:**—

**வழிமேல் விழிவைத்து:**— சென்றவன்னம் எப்பொழுது வருமோவென அவ்வழியிலே வைத்தகண் வாங்காமல் பார்த்துப் பார்த்துச் சோர்ந்து போனான்.

**வாள் நுதலாள் நாமமொழிமேல் செவிவைத்து:**—உள்ளத்திலே ஒன்று ஊன்றி நினைப்பவர்களுக்கு வெளியிலே நிகழ்வதெல்லாம் அந்நினைவிற்கு இணங்கித் தோன்றுவது இயற்கை. தமயந்தி தமயந்தி என்ற எண்ணமே முழுமனதும் குடிகொள்ள நளன் இருந்தானாதலால், இலையசைந்தாலும் குருவி கூவினாலும் அவனுக்குத் தமயந்தியின் பேரைக் கூப்பிடுவது போலவே கேட்டது. கேட்கக் கேட்கப் பிரபஞ்ச முழுவதும் தமயந்தி தமயந்தி என்றே தன் காதருகில் ஒலிப்பதாக அப்பேரின் ஒலிக்குத் தன்செவியை அர்ப்பணம் செய்துவிட்டிருந்தான்.

**மோகச் சுழிமேல் தன் நெஞ்சு ஓடவைத்து:**—மோகத்தை ஒரு பெரிய நீர்ச்சுழியாக உருவகம் செய்யப்பட்டிருக்கிறது. வதனமதி, என்பதுபோல் ஒன்றே மற்றொன்று என்று கூறுவது உருவக அணி என்று முன்னால் கூறியிருக்கின்றேன். அதேமாதிரி, மோகச் சுழி, என்பது மோகமாகிய சுழி என்றும் பொருள்படுவதால் உருவகம். இதனில் அவன் மனம் ஒரு துரும்பு போல் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தது. நீர்ச் சுழியுள் பட்டவொரு துரும்புபோல் அவன்மனம் காமத்தால் அலைப்புண்டு கிடந்தது, என்பது பொருள்.

அயர்வான் :— அயர்கின்றவன் - அயர்வுகொண்ட நளன்.

நெடுவானில் மஞ்சுஓட அன்னம்வரக் கண்டான்:— அன்னம் போன வழிமேல் விழிவைத்துப் பார்த்துக் கொண்டிருந்த நளன், ஆகாயவலயத்தில் சிறிய வெண் மேகம் ஒன்று தோன்றிய போதெல்லாம் அதைக்கண்ட மாத்திரத்தில் அன்னந்தான் வந்துவிட்டதென வெண்ணி யெண்ணி மோசம்போய்க் கொண்டிருந் தான் என்றும், இப்பொழுது அந்தப் போலி அன்னங் களாகிய மேகங்கள் போக நிசமான அன்னம் வருவதைக் கண்டானென்றும் கூறுவதுதான் இந்த வாக்கியத்திற் குப் பொருத்தமான பொருள் ஆகும்.

குறிப்பு :—அயர்வான். அயர்தல் - சோர்தல். அயர் வான் - சோர்கின்றவன். முன் (190-வது பக்கம்) பெயர்ச் சொல், வினைச் சொல், இவைகளைப் பற்றிய இலக்கணம் சிறிது சொல்லியிருக்கின்றேன். மரம் நாய் சூரியன், போன்ற பொருள்களின் பெயரையேனும், அழகு செம்மை போன்ற குணங்களின் பெயரையேனும், கொலை பேச்சு நடத்தல் போன்ற தொழில்களின் பெய ரையேனும் குறித்து நிற்கின்ற சொற்கள் பெயர்ச்சொல் எனப்படும். இவைகளெல்லாம் ஒரு பெயரால் அணையும் பெயர். ஆனால் வினையினாலும் ஒன்றிற்கு ஒரு பெயர் வரலாம். போனவன் சிரித்தவன் என வருமானால் இவைகளை வினையால் அணையும் பெயர் என்று இலக் கண நூல்கள் கூறும். போனவன் சிரித்தவன் என்ற பொருள் ஒன்றுமில்லை. ஆனால் போ சிறி என்ற வினை களையொட்டிய ஒருவனை அவைகள் குறிக்கின்றன. ஆகையால் அவைகளுக்கு வினையால் அணையும் பெயர் என்ற பெயர் வந்தது. போனவன் சிரித்தவன் என்றஉரு வத்தில் சொற்கள் இருந்தால் சந்தேகம் இல்லை. ஆனால் போனான் சிரித்தான் என்ற உருவமும் வினையாலணை யும் பெயர்களுக்கு உண்டு. போனான் சிரித்தான், என்பனபோன்ற முடிவுடைய சொற்கள் சாதாரண மாக வினைமுற்றாகத்தான் வரும். எனினும் போனா னைப் பின்பற்றினேன், இதுகண்டு சிரித்தானுக்குச் சிறிதும் அறிவில்லை, என்ற வாக்கியங்களில் அவை வினையாலணையும் பெயராக வருகின்றன. 'நான் உன் வீட்டிற்கு வந்தேன்', என்றதில் வந்தேன் வினை முற்று. 'வந்தேன் எனக்கு நீ முகம் கொடுக்கவில்லை' என்றதில் வந்தவன் என்ற பொருளில் வினையா லணையும் பெயர். [மற்றப் பெயர்ச் சொற்களெல்லாம் காலம் காட்டாது] இந்த வினையாலணையும் பெயர் மாத் திரம் காலம் காட்டும். அயர்வான், என்பது இவ்வித வினையாலணையும் பெயர்.

முகம்பார்த் தருணோக்கி முன்னிரந்து செல்வர்
அகம்பார்க்கு மற்றோரைப் போல—மிகுங்காதல்
கேளா விருந்திட்டா னன்னத்தைக் கேளாரை
வாளால் விருந்திட்ட மன். 50

பதப்பிரிவு :—முகம் பார்த்து அருள் நோக்கி முன் இரந்து செல்வர் அகம் பார்க்கும் அற்றோரை போல மிகும் காதல் கேளா இருந்திட்டான் அன்னத்தை கேளாரை வாளால் விருந்து இட்ட மன்.

அன்வயம் :—கேளாரை வாளால் விருந்திட்ட மன், முன் செல்வரை இரந்து (பின் அவர்களது) முகம் பார்த்து அருள்நோக்கி அகம்பார்க்கும் அற்றோரைப் போல, (தன்) மிகும் காதல் அன்னத்தைக் கேளா இருந் திட்டான்.

கருத்து:—தன்னுள்ளே மிகுகின்ற காதலினால் நளன், வந்த அன்னத்தை ஒன்றும் கேட்கமாட்டாதவனாய், அதன் முகக்குறியைக் கருதிநோக்கி, "என்னசொல்லு மோ இது, தமயந்தி தன்னை மணப்பதற்கு இணங்கினா ளென்று சொல்லுமோ, அல்லது மறுத்துவிட்டாள் என்று சொல்லுமோ," என ஏங்கி அதன் வாய்பார்த் துச் சும்மா இருந்துவிட்டான்.

பதவுரை.

கேளாரை - பகைவரை
வாளால் - (தன்) வாளினால்
விருந்து இட்ட - (கழுகிற்கு உடலையும் எமனுக்கு உயிரையும்) விருந்து செய்வித்த
மன் - மன்னனாகிய நளன்,
செல்வர் - பணக்காரர்களை
முன் - முதலிலே
இரந்து - ஒன்றை யாசித்து,
(பிறகு அவர் என்ன சொல்வரோ என்று அவர்களது)
முகம் - முகக்குறியை
பார்த்து - கருதியும்
அருள் - (கண்ணின்) கருணையை
நோக்கி - கவனித்தும் (இவைகளால் அவர்களது)
அகம் - மனமானது
பார்க்கும் - (எவ்விதமாக இருக்கின்றதென்று) ஊகிக்க முயலும்
அற்றோரை - தரித்திரர்களை
போல - போல,
மிகும் - மிகுகின்ற
காதல் - காதலால்
அன்னத்தை - அன்னப்பக்ஷியை
கேளா - (ஒன்றும்) கேட்காமல்
இருந்திட்டான்- இருந்து விட்டான்.

குறிப்பு :—முன் 49-வது செய்யுள் முதல் இனிவரும் 53.வது செய்யுள் வரையிலும் இருக்கின்ற 5 செய்யுள்க ளும் மிகவும் அழகானவை. நளனுக்கும் அன்னத்திற்கும் சிறியதொரு நாடகம் இங்கு நடை பெறுகின்றது. நளன் இருந்த நிலையையும், அவனிருந்த நிலையிலிருப்பவர்கள் தன்மையும், காதலர்க்குத் தூது போகின்றவர்களது குண மும், இவைகளுக்கு எல்லாம் இணங்கக் கற்பனை செய்த கவியின் இருதயமும் யாவும் அறியாமற்போனால் அங்கு நிகழ்ந்த நாடகமும் நம்மெதிரே காணும்படி இந்தச் செய் யுள்களுக்குப் பொருள்கொள்ள மாட்டோம். முன் செய் யுளிற்கும் பின் செய்யுளிற்கும் பொருத்தம் இருக்கின் றதோ இல்லையோ என்று கூடக் கருதாமல் பதத்துக் குப் பதம் ஒரு அர்த்தம் சொல்லிவிட்டுச் சுவை யொன் றும் இச் செய்யுள்களில் காண நேராமற் போய்விடும். 53-வது செய்யுளின்கீழ் இந்நாடகத்தை வகுத்துக் காட் டுவேன்.

அன்னக் குலத்தி னரசே யழிகின்ற [ரைத்த
என்னுயிரை மீள வெனக்களித்தாய்—முன்னு
தேமொழிக்குத் தீதிலவே யென்றான் றிருந்தாரை
ஏமொழிக்கும் வேலா னெடுத்து. 51

பதப்பிரிவு :—அன்ன குலத்தின் அரசே அழிகின்ற என் உயிரை மீள எனக்கு அளித்தாய் (முன்) உரைத்த தேன்மொழிக்கு தீது இலவே என்றான் திருந்தாரை எம் ஒழிக்கும் வேலான் எடுத்து.

அன்வயம் :—திருந்தாரை எம் ஒழிக்கும் வேலான், "அன்னக் குலத்தின் அரசே, அழிகின்ற என் உயிரை மீள எனக்கு அளித்தாய். முன் உரைத்த உன் தேன் மொழிக்கு (இப்பொழுது) தீது இலவே" என்று எடுத் துச் சொன்னான்.



பதவுரை.

திருந்தாரை - பகைவர்களை
ஏம் - செருக்கு
ஒழிக்கும் - அழிக்கின்ற
வேலான் - வேலாயுதத்தையுடைய நளன்,
" அன்ன - அன்னங்களினது
குலத்து - குலத்திற்கு
அரசே - தலைவனே,
அழிகின்ற - சோர்கின்ற
என் - என்னுடைய
உயிரை - உயிரை
மீள - மறுபடியும்
எனக்கு - எனக்கு
அளித்தாய் - (நீ வந்ததாலேயே) கொடுத்தாய். கொண்டு வந்த வதந்தியை இன்னும் ஏன் கூற மாட்டே னென்கிறாய்.
முன் - (நீ போவதற்கு) முன்
உரைத்த - பேசிய
மொழிக்கு - பேச்சிற்கு
தீது - (இப்பொழுது ஒரு) கேடும்
இலவே - இல்லையே"
என்றான் எடுத்து - என்று உரத்துச் சொல் லினான்.

கருத்து:—நளன் ஒன்றும் கேட்காதிருக்க அன்னமும் ஒன்றும் சொல்லாதிருந்தது. 'உன்பேச்செல்லாம் போய் விட்டதா' என்று கோபித்தான்.

கொற்றவன்ற னேவலினாற் போயக் குலக் [கொடிபா
லுற்றதுவு மாங்கவடா னுற்றதுவு—முற்று
மொழிந்ததே யன்ன மொழிகேட் டரசற்
கழிந்ததே யுள்ள வறிவு. 52

பதப்பிரிவு:— கொற்றவன்தன் ஏவலினால் போய் அ குல கொடிபால் உற்றதுவும் ஆங்கு அவள்தான் உற் றதுவும் முற்றும் மொழிந்ததே அன்னம் மொழி கேட்டு அரசற்கு அழிந்ததே உள்ள அறிவு.

பதவுரை.

கொற்றவன்தன் - நளராசனுடைய
ஏவலினால் - கட்டளைப்படி
போய் - (விதர்ப்பநாட்டிற்குப்)போய்
அ - அந்த
குல - சிறந்த குடியிற் பிறந்த
கொடிபால் - பூங்கொடி போன்ற தமயந்தியி [னிடத்தில்
உற்றதுவும் - (தான்) சேர்ந்ததும்,
ஆங்கு - அவ்விடத்தில்
அவள்தான் - தமயந்தி
உற்றதுவும் - (தனியிடத்திற்குத் தன்னையழைத் துச்) சேர்ந்ததும்
முற்றும் - (இவையனைய இடைநிகழ்ச்சியாவையும்) ஒன்றுவிடாமல்
அன்னம் - அன்னப்பக்ஷி
மொழிந்தது - சொல்லிக்கொண்டு வந்தது.
மொழி - இவ்வார்த்தையை
கேட்டு - கேட்கக்கேட்க
அரசனுக்கு - நளனுக்கு
உள்ள - இருந்த சிறிது
அறிவு - ஸ்மரணையும்
அழிந்ததே - போய்விட்டதே.

கருத்து :— அரசன் கோபத்துடன் கேட்டதால் அன்னம் அதற்கு மாறாக அவனைச் சிறிது துன்புறுத்து தற்கு எண்ணி, முடிவைச் சொல்லாமல் முன்னிகழ்ந்த மற்றதெல்லாம் விரிவாகச் சொல்லிவரவே, அரசன் பொறுக்கமாட்டாமல் மனந்தளர்ந்து ஸ்மரணையற்றுப் போய்விட்டான்.

கேட்ட செவிவழியே கேளா து உணர்வோட
வோட்டை மனத்தோ டுயிர்தாங்கி—மீட்டுங்
குழியிற் படுகரிபோற் கோமான் கிடந்தான்
தழலிற் படுதளிர்போற் சாய்ந்து. 53

பதப்பிரிவு:— கேட்ட செவி வழியே கேளாது உணர்வு ஓட ஓட்டை மனத்தோடு உயிர் தாங்கி மீட்டும் குழியில் படு கரிபோல் கோமான் கிடந்தான் தழலில் படு தளிர்போல் சாய்ந்து.

அன்வயம்.-கோமான்,கேட்ட செவிவழியே கேளாது உணர்வு ஓட ஓட்டை மனத்தோடு உயிர் தாங்கி, தழ லில் படுதளிர்போல் சாய்ந்து குழியில் படு கரிபோல் கிடந்தான்.

பதவுரை.

கோமான் - நளனானவன்
கேட்ட -(அன்னம் சொல்லிவந்த வார்த்தைகளைக்) கேட்டுக்கொண்டிருந்த
செவிவழியே - காதுகளின் வழியாகவே
கேளாது - முடிவு என்னவென்று கேட்பதற்குமுன்
உணர்வு - ஸ்மரணையானது
ஓட - ஓடிவிட
ஓட்டை - உடைந்துபோன
மனத்தோடு - மனதினோடு
உயிர்தாங்கி - உயிரைமாத்திரம் தாங்கினவனாய்
தழலில் - நெருப்பில்
படு - பட்ட
தளிர்போல் - தளிரைப்போல்
சாய்ந்து - வதங்கிச் சாய்ந்து,
குழியில் - குழியிலே
படு - அகப்பட்ட
கரிபோல் - யானையைப்போல்
கிடந்தான்.- விழுந்து கிடந்தான்.

கருத்து :—ஆனாவசியமான வார்த்தைகளை அன்னம் சொல்லி வரவா அரசனுக்குப் பொறுக்கமாட்டாமல் மன முடைந்து நினைவு அழிந்து எந்தக் காதை இவ்வார்த் தைகள் துளைத்து வைத்தனவோ அந்த வழியாகவே ஸ்மரணை போய்விட, அன்னத்தின் முடிவுரையைக் கேட் பதற்கு முன் அவன் தரையிற் சாய்ந்து விட்டான். இவன் நிலைகண்டு அன்னம் தன் விளையாட்டால் இவ னைக்கொன்றே விட்டதோஎன்று பயந்து பறந்து போய் விட்டது.

விரிவுரை :—தமயந்தியின் செய்தியும் அவள் சுயம்வர ஏற்பாடுகளும் அங்கு அவ்வாறாக, 49-வது செய்யுள் முதல் அன்னத்தின் வரவை எதிர்பார்த்துக் கொண் டிருந்த நளனிடத்தில் மறுபடியும் நம்மை அழைத்து வந்து இங்கு நிகழ்ந்ததைக் கவி கூறுகின்றார். இச்செய் யுள்களுக்கு உரைகண்ட ஆசிரியர் அனைவரும், 'வந்த அன்னத்தை விஷயம் யாதென நளன் கேட்டானென் றும் அது, தமயந்தியும் இவன்மேல் காதல்கொண்டுளள் என்று கூறியதென்றும், அதைக்கேட்டு அவன் மனஞ் சோர்ந்து பதைபதைத்து விழுந்தன னென்றும்' பொருள் வரைந்துள்ளார். அந்த அர்த்தங்களும் சொல் லுக்கும் இலக்கணத்திற்கும் இணங்கும். எனினும், 'நளனும் முதலில் கேட்கவில்லை, அன்னமும் முடி வைச் சொல்லாமலே போய்விட்டது' என்று இங்குக் காட்டிய பொருள் நிகழ்ச்சிக்கும் பொருத்தமாயிருக் கலாம். பொருத்தத்தை அடுத்த பாடத்தில் விரிவாகக் காட்டுவேன்.

# கம்ப ராமாயணம்

## பால காண்டம்

### 3. நகரப் படலம்.

காதலர் செய்தி வீதியிற் ரேன்றும்.

கரியதோ இதுவெனத் தோன்றும் வண்ணம் தன்ஞெளி மழுங்குவதும், கொடிகள் தோய்க்கத் தன்னுருத் தேய்ந்து போவதும் விண்ணிபங்கு திங்களுக்கு அயோத்தியால் விளையும் இடையூறுகளாயினவாறும், பொன்ஞகச் சிலபோதும் மண்ஞகச் சிலபோதும் தோன்றுகின்ற விண்ஞட்டிற்கு இந்நகரே ஆதாரமா யமைந்த பரிசும் உலகம் வியக்கக் கம்பர் காட்டினர். தனக்குகந்த தாயவோர் ஊரின் வனப்பை உரைப்பதற்காக இந்துவும் இமையவர் நாடும் இவ்வாறு தாழ்வடையலாயின. எனினும், தினபதிக்கே அயோத்தியால் நேர்கின்ற நிலைமையை நோக்குங்கால், அம்புலியையும் அமராவதியையும் கம்பர் உதாரமாகவே பாராட்டினரென்று எண்ணும்படியாகின்றது. தேய்ந்தாலும் தன்னெளி கெட்டாலும் திங்களென்றவோர் பொருளேனும் தனியாகவுண்டென அவருக்குத் தோன்றியதே போதும். பொன்னேனும் மண்ணேனும் விண்ணவர்க்கு ஒரு நாடு அளித்ததும் இவர் செய்த வுதவி. ஆனல், பானுவின் கதியைக் காணப் பரிதாபமா யிருக்கின்றது. அயோத்தியின்றி ஆதித்தனே இல்லை யென்று நம் புலவர் சாதித்துவிட்டார். பொன்னும் மணியும் மற்றுள பொருள்கள்யாவும் எதனிடத்தில் பெற்றவொளியால் திகழ்கின்றனவோ, எதுவொன்று உலகினின் ஒளிக்கெல்லாம் பிறப்பிடமாயதோ அச்செல்வக் கதிரோன் சூரியனேயே இல்லையென்று சொல்லிவிட்டால் இதனைவிட உலகமலைவாய வுரை வேறென்று எங்குளது. சொல்வதுமல்லாமல் அதற்குக் காட்சிப் பிரமாணமும் காட்டிச் சாதிக்கப்புகுந்த புலவரின்திறமை சிறியதோ பெரியதோ செப்பலரிது.

எழுமிடத் தகன்றிடை யொன்றி யெற்படு
பொழுதிடைப் போதலிற் புரிசைப் பொன்மதில்
அழன்மணி திருத்திய வயோத்தி யாளுடை
நிழலெனப் பொலியுமா னேமி வான்சுடர்.

[உதிக்கின்றபோது வட்டவடிவமான சூரியன் அகலமாயிருக்கின்றது, நண்பகலில் சுருங்கி வருகின்றது. சாயங்காலத்தில் சிதறிப் போகின்றது. ஆதலால் இது, விளங்குவதெல்லாம், மாணிக்கங்கள் பதியப்பெற்றுப் பொன்மதில் சூழ்ந்த அயோத்தியின் 'நிழல்' என்னும் தன்மையாலன்றி வேறன்று.]

சூரியனது ஒளியைப் பூதக்கண்ணுடியால் சுருங்க வைத்துப் (focussing with a lens) பார்த்தவர்க்கு இச்செய்யுளில் சொன்ன செய்தி தெரியவரும். கதிரவனுக்கு எதிரே ஒரு பூதக்கண்ணுடியைக் காட்டி விழுகின்ற நிழலைக் காகிதமொன்றினில் பிடிப்போமாயின், அந்நிழல் முதலில் அகன்ற வட்டமாகவும் அதிகவொளி இல்லாததாகவு மிருக்கும். பிறகு அக்கண்ணுடியைக் காகிதத்திற்கு அருகு கொண்டுவரவர அவ்வட்டம் குறுகிக் குறுகி ஒளியும் மிகுந்து மற்ருேர் சூரியனைப்போலவே தோன்றும். இதற்குத்தான் ஒளிமுனை (focus point) என்று பெயர். மறுபடி அக்கண்ணுடியைக் காகிதத்தினின்று தூரமாக அகற்றிக் கொண்டு போகப் போக, நிழல்வட்டம் ஒளிகுறைந்தும் அகன்று கொண்டும் வந்து கடைசியில் சிதறுண்டு இல்லாமலே போய்விடும். சூரியனின்றி இந்நிழல் வட்டம் இல்லை. இதனைச் சூரியனென்றும் எவரும் மதியார் அயோத்திக்கும்ஆதித்தனுக்குங் கம்பர் கற்பித்த தொடர்பு இத்தகையது. இயற்கையாய்த் தன்னுளே சுயம்பிரகாசமா யிருப்பது அயோத்தியாம். அவ்வயோத்தியின் சுயவொளி மண்டலத்தின் மையமாம் சூரியன். சந்தேகமுளதாயின் உதயத்தில் உருவகன்று ஒளிகுறைந்து இரவிதா னிருப்பதைப் பாரென்பர். நகரிற்கருகே நடுவெய்திய நிலையினிலது சிறுமுனைச் சோதியாய்ச் சுருங்குதலும் காண். பின்னும் சாயுங்காலத்தில் நகரனின்றகன்றகன்றேக வட்டம் வளர்ந்து ஒளி தேய்ந்து கடைசியில் அது இல்லாமலே போய்விடுவதையும் பார். பார்ப்பாயாயின் பின்னை, அழல்மணி திருத்திய அயோத்தியாளுடை நிழலேயாய நலத்தினுல் நேமி வான்சுடர் பொலிகின்ற தென்பதற்கு ஐயுறவு முண்டோ, சொல்.

இத்தகைய திருநகருள் நாம் எய்திய காலமும் அதிகாலையா யிருத்தல் வேண்டும். வைகறைப் பரிதியின் செங்கதி ரொன்றிரண்டு நெடுமுடிக் கோயிற் கோபுரங்கள் மீதும் முத்துவடக் கொடிமாலைகளூடும் கொடிச் சூலத்திலைகளிலும் திளைத்தொளி இலங்கச் செய்வதாயின. மனையகம் யாவும் துயிலுணர்ந்தில. தெருக்களும் போக்குவரவற்றிருந்தன. ஊரரவம் எழவில்லை. ஆகலால், இதுகாறும் கூடகோபுர மாடமாளிகைகளின் பெருமையே கண்டுவந்த நாம் இனி, இம்மாநகர்ச் செல்வ மாந்தர் பயிலுமோர் பெருவாழ்வின் வைபத்தைக் கண்ணுலும் செவியாலும் மற்றுள புலன்களாலும் பருகிக் கருத்துளே களி சிறக்க ஊட்டுவார் சிலசெய்தி நம்புலவர் காட்டுவார் சில காட்சி.

மாளிகைச் சாளரங்கள் திறக்கின்றன. திறக்குங்கால் அறைகமழ இரவினில் செறிந்தடர்ந்த நறும்புகை ஆங்காங்குச் சிறைநீங்கி வெளிப்புறம் எழுந்து வரிசை வரிசையாய்ப் பாய்கின்ற மிகுதியை என்னென் றியம்புவது :—

ஆய்ந்தமே கலையவ ரம்பொன் மாளிகை
வேய்ந்தகா ரகிற்புகை யுண்ட மேகம்போய்த்
தோய்ந்தமா கடனுறுந் தூப நாறுமேற்
பாய்ந்ததா ரையினிலை பகரல் வேண்டுமோ.

[திருத்தமான மேகலையை அணிந்தமாதர் தமது பொன்மாளிகைகள் மணம் சூழுமாறு ஊட்டிய அகிலின் புகை வெளிப்பரவ நாடோறும் அதனேடு கலந்த மேகங்கள் போய்ப்படிந்த பெரியகடலும் (புலால் நாற்றம் நீங்கி) அத்தூபத்தின் வாசனையே வீசுமென்ருல், மாளிகைகள் ஒவ்வொன்றி னின்றும் காலையில் வெளியே பாய்கின்ற புகையின் வரிசையைச் சொல்லவும் வேண்டுமோ]

இன்னவாறு நறுமணத்தோடு அந்நகருக்கு நாளும் மலர்கின்றது. மலரு மந்நாளில் முதல்முதல் நம் செவிக்கு மனைகளினின்று யாழும் குழலும் இசையுமென மிழற்றுகின்ற மடவார்தம் இன்மொழிச் செல்வம் எய்தக் கேட்கின்ருேம். அவைதாம்,

குழலிசை மடந்தையர் குதலை கோதையர்
மழலையங் குழலிசை மகா யாழிசை
எழிலிசை மடந்தைய ரின்சொ லின்னிசை
பழையர்தஞ் சேரியிற் பொருநர் பாட்டிசை.

[கூந்தல் முடியாச் சிறுமியர் பேசும் குதலைச் சொற்கள் குழலொலி போன்றிருக்கும். மங்கையர் மிழற்றும்



மழலை மொழிகள் மகரவீணையின் நாதத்தை யொக்கும். அழகு மூற்றிய மடந்தையர் நவிலும் சொற்களே கள்விற்போர் சேரியில் களிப்பு மிகுந்து பாடும் கூத்தர்தம் பாட்டினிசைக்கு நிகராயிருக்கும்.]

கூடாக் குதலை குழலே போன்றும், மழலைச் சொற்கள் யாழொலிபெற்றும், இயல்வகை மொழியே இசைநலத் தோடும் அமைவது இம்மாநகரி மாதர் திறம்.

நறுமணமும் நயமொழியும் இவை நுகர்ந்து மகிழுவோம் நாம் இன்னும் அந்நகர் மைந்தரையும் மடவாரையும் கண்ணிற் கண்டிலம் எனினும் வெகுநேரம் காக்க வேண்டியதில்லை. கரிய பெரிய யானைகள் வீதிவாய் இப்பொழுது வருகின்றன. பிள்ளைகள் விளையாடுவதற்கமைந்த பெருவெளிகளைக் கடந்து அவை செல்கையில் அவ்விடங்களில் தம் கால்களால் குழிகள் விளைத்துச் செல்கின்றனவேயென நாம் இரங்குமத்தருணத்தில் கண்டவர் கண்களைக் கொள்ளையிற் கொள்ளும் இளமையும் வனப்பும் வாய்ந்த விளையாட்டுச் சிறுர் கூட்டங் கூட்டமாய் வந்தவ ணடைகின்றனர் அவரணிந்துள சுண்ணப் பொடிகளே யுதிர்ந்து அக்குழிகள் தூர்ந்து போவதால் ஆட்டத்திற்கு ஓர் இடையூறும் நேர்ந்திலது.

மைந்தரிவ்விதம் வெளிப்போந்து விளையாட (மங்கையரும்) தத்தம் மனைசூழ்ந்த மலர்வனத்துள் புகுந்து பந்தடிக்க வருகின்றனர்.

பந்துகண் மடந்தையர் பயிற்று வாரிடைச்
சிந்துவ முத்தின மவைதி ரட்டுவார்
அந்தமில் சிலதிய ராற்ற குப்பைகள்
சந்திர னெளிகெடத் தழைப்ப தண்ணிலா.

[பந்துகள் ஆடுகின்ற மடந்தையர்க் கிடையே, அவராடும் ஆர்வத்தால் முத்துவடம் அறுந்து சிந்தும். சிந்திய முத்துக்களைத் தாதியர் திரட்டிச் சேர்ப்பார். சேர்த்த இம்முத்துக் குவியல்கள் சந்திரனினும் சிறந்தவோர் நிலவொளி வீசுவனவாகும்]

அன்ன காலையில் நகரின் வீதிவாய் பாணர் மாகதர் முதலாய இன்னிசைச் செல்வரும் மதங்கியராதிய கூத்தாடு கொடியனைய அபிநயத் தெரிவையரும் வருவாராகி மனையின் வாயிலிலும் சந்தி சதுக்கங்களிலும் ஆடலும் பாடலும் புரிபவராகின்றனர். தாம் வளர்க்கும் பைங்கிளிக்குப் பாலூட்டியவாறே மாதர் பேசப் பயில்வித்தனராய் மனையகம் அமர, அவ்வேளை

இறங்குவ மகரயா ழெடுத்த வின்னிசை
நிறங்கிளர் பாடலா னிமிர்வ வவ்வழி
கறங்குவ வள்விசி கருவி கண்முகிழ்
துறங்குவ மகளிரோ டோதுங் கிள்ளையே.

[வீணையின் ஒலி வாய்ப்பாட்டோடு எறியும் இறங்கியும் இசைக்கும். அதற்கிணங்க வாரிறுக்கிய மத்தளங்கள் முழங்கும். இதனைக் கேட்டு மகளிரோடு பேசிக்கொண்டிருக்கும் கிளிகள் கண்களை மூடிக்கொண்டு துயின்றுவிடும்]

நறுமணமுயிர்த்த வாங்கே துயிலுணர்ந்த வந்நாள் பண்மொழியும் இன்னிசையும் வளர்க்கவரும் கதிரவன் எழவெழ வரசகுமாரும் மற்றுள செல்வமாந்தரும் தெருக்களில் நடக்கலாயினர். புரவியுந் தேரும் கடகரிகளும் நடமாடுகின்றன. இவ்வாறு வருவோர் சிலர் குதிரைமீ தமர்ந்தவாங்கே ஆங்காங்குச் சதிமிதித்தாடல் புரியும் மதங்கியரின் நாடகத்தொழில் கண்டு மகிழ்வெய்தி நிற்கின்றனர். அவளைச் சூழ்ந்துள சனங்களுக்கு அயலே மைந்தர் வைகின்ற அப்பரிகளும் அருங்கலை நுணுக்கம் செவ்விதிலுணர்ந்து அனுபவிக்கும் இயல்பின.

பதங்களிற் றண்ணுமை பாணி பண்ணுற
விதங்களின் விதிமுறை சதிமி திப்பவர்
மதங்கிய ரச்சதி வகுத்துக் காட்டுவ
சதங்கைக ளல்லன புரவித் தார்களே.

[மத்தளமும் வீணையும் பாடலும் பொருந்தப் பரத சாஸ்திர விதிப்படி பலவிதங்களில் மதங்கியர் சதிமிதிப்பார். அந்தத் தாளவொத்தை வகுத்து அவர்கள் காலிற் கட்டியுள்ள சலங்கைகளின் ஒலி காட்டும். அதுவன்றி, அன்னர் பாடலையும் ஆடலையும் ஆதரித்துத் தாளத்திற்கு இணங்கத் தலையசைக்கும் இக்குதிரைகளின் கழுத்தில் கட்டிய கிண்கிணி மாலையுங்கூட அச்சதங்கையோடு இணங்கி யொலிக்கும்.]

இசைநயம் தெரியவல்ல அசுவத்தின் செய்தி நோக்கிய அம்மதங்கிக்கு,

முளைப்பன முறுவலம் முறுவல் வெந்துயர்
விளைப்பன வன்றியு மெலிந்து நாடொறும்
இளைப்பன நுண்ணிடை யிளைப்ப மென்முலை
திளைப்பன முத்தொடு செம்பொ னரமே.

[சிறுநகை விளைகின்றது. ஆனல் குதிரைமீ தமர்ந்த மைந்தர் தம்மையே குறித்து அவள் புன்னகை புரிந்தாளென்ன மையல் மிகுந்து வருந்துகின்றனர். பின், நாளுக்குநாள் முலையின் பாரத்தால் மெலிந்து போகின்ற அவளது இடுப்புப் பின்னும் மெலிந்து போகும்படி இவ்வாலிபர் கலையின் திறத்திற்குப் பரிசளித்தனராய்ச் சூட்டுகின்ற முத்தாரமும் பொன்மாலைகளும் அம்முலையின் மேல் பெருகி நிறைகின்றன.]

வீதியிலாடும் மதங்கியர் செய்தி இவ்வாருக அரங்கிடையாடும் மடந்தையர் சிலர்பாலும் இதுவனைய நிகழ்ச்சி நேர்வதுங் காணலாம் கூத்தும் பாட்டும் குறையா வந்நகரில் போதும் இடமும் ஒருபொருளல்ல. தெருவிலும் ஆடுவார் சிலர் அரங்கிலும் ஆடுவார். கலைநுகர்தற்குக் காலமொன் றெல்லையாதலால் மாலையென்ற நியதியின்றிக் காலையிலும் நாடகச்சாலைகள் நடைபெறும் போலும். அங்கு,

அரங்கிடை மடந்தைய ராடு வாரவர்
கருங்கடைக் கண்ணயில் காமர் நெஞ்சினை
ஒருங்குவ மற்றவ ருயிர்க ளன்னவர்
மருங்குல்போற் றேய்வன வளர்வ தாசையே.

188996

[நாடக மேடையிலே மடந்தையர் ஆடுவார். அவர்களது கரியகடைக் கண்ணினின்று பாய்கின்ற பார்வை காமுகர்களது நெஞ்சை வருத்தவே, ஆடுபவள் இடையைப் போன்று பார்ப்பவர் உயிர் தேய்வடைவதும், (அவள் முலையைப் போல்) இவர்களது ஆசை வளர்வதும் நேர்கின்றன]

இச்செய்யுளின் ஈற்றடி 'வளர்வது ஆசையே' என்னும் மட்டிலே முடிந்த போதிலும், காமுகரின் உயிர் அவள் இடைஎனத் தேய்ந்த தென்றதற்கிணங்க அவரது ஆசையும் அவள் முலைபோன்று பூரித்ததென வருவித்துக் கொள்வது சாலப் பொருந்தும். முலை வளர்வதால் இடை தேய்கின்றபடி ஆசை மிகுவதால் அவராவி ஒடுங்குவதும் ஒக்கும். எண்ணூ ரூண்டுகளுக்குமுன் கம்பரைப் போன்றே கவி சக்ரவர்த்தி யெனவிளங்கிய ஜெயங்கோண்டார் தனது பரணியில், ஊடியமாதர்தம் புலவி தணிந்து எய்திய நாயகர்க்குக் கதவுதிறக்குமாறு பாடிய,

புடைபட விளமுலை வளர்தொறும்
பொறையறி வுடையரு நிலைதளர்ந்
திடைபடு வதுபட வருளுவீ
ரிடுகத வுயர்கடை திறமினே.

[பருத்தெழும்படி நும் இளமுலை வளரவர, ஆடவர் தமது பொறை அறிவு ஆதிய அரியதன்மைகள் தளர்ந்து,

உமது இடை படும்பாடுபட்டு அலையும்படி செய்து வைக்கும் மாதர்காள், நீங்கள் அடைத்த கதவைத் திறந்திடுமின்]

என்னும் பாசுரம், இவர் ஆசைக்குவமையாக அவர் முலையை வருவித்துப் பொருள் கொள்வதும் தகுமென்பதற்கு ஆதாரமாகின்றது.

இனித் தெருக்களில் மக்களோடு யானையும் இவுளியுந் தேர்களும் நெருங்கி யடர்கின்றன. இவைகள் போக்குவர வெய்துதற்கு விளைகின்ற இடையூறு ஒன்றல.

தழல்விழி யாளியுந் துணையுந் தாழ்வரை
முழைவிழை கிரிநிகர் களிற்றின் மும்மத
மழைவிழும் விழுந்தொறு மண்ணுங் கீழுறக்
குழைவிடு மதில்விழுங் கொடித்திண் டேர்களே.

[தீச்சிந்தும் கண்களையுடைய சிங்கமும் அதன் பெண்ணும் விரும்பி வாழ்கின்ற குகைகள் பொருந்திய பக்கங்களையுடைய மலைகள்போன்ற யானைகளின் மும்மதம் மழைபோல் பொழிந்து பாயும். அப்படி மதஜலம் பாய மண்குழைந்து தெருவெல்லாம் சேறாகும். அச்சேற்றில் கொடிகள் கட்டிய வலிய தேர்கள் புதைந்து விழும்]

தேரூர்ந் தோர்க்குறும் இடுக்கண் இதுவெனின் இவுளி உகைத்தோர்க்கும், மற்று வாகனம் விட்டுக் காலால் நடந்தவர்க்கும் அவ்வீதிவாய் ஏகுதல் எளியதன்று.

ஆடுவார் புரவியின் குரத்தை யார்ப்பன
சூடுவா ரிகழ்ந்தவத் தொங்கன் மாலைகள்
ஓடுவா ரிழுக்குவ வூட லூடறக்
கூடுவார் வனமுலை கொழித்த சார்தமே.

[ஊடலைத் தணிக்கும் பொருட்டுத் தம் நாயகர் சூட்டிய மாலைகளை மாதர்கள் முன்னிரவு மனைநின்று எறிந்துவிட அவை தெருக்களில் கிடந்து, நடையே நடனம்போல் படர்கின்ற உயர்தரக் குதிரைகளின் குளம்பிலே சிக்கிச் செல்லவொட்டாமல் கட்டிவிடுகின்றன. மற்றுக் கால் நடையாக விரைந்து செல்பவரோ என்றால், ஊடல் தீர்ந்து கூடிய மாதர்தம் அழகிய முலைகளினின்று பெருகிய சந்தனக் குழம்பு தெருவிலே வழிந்து அவர்களையும் வழுக்கிவிடும்]

ஆதலால், காதலார் முன்னிரவு ஊடினும் கூடினும் பின்னாள் வீதிவாய்ச் செல்வோர்க்கு இடையூறே காண், எனக் கம்பர் நமக்கு நகையோடு காட்டுகின்றார். காதல் நாடகத்தில் கலவாத அயலார்க்கு அச்செய்தி எந்நாளும் நகையே நல்கும்.

இக்கருத்துக் கம்பர் ஒருவருக்கே உரியதன்று, புதியதுமன்று. அகம்நிகழ் அன்பினால் புறம்பயில் மாந்தர் இடர் சிறிதுறுவதை, வீறுகோளணியாக நகரின் செல்வ மிகுதிக்குப் புலவர்பலர் நிமித்தமாக் கொண்டுளர்.

உருகுதம் கொழுநர்பா லூடி நீத்தநல்
விரைகமழ் தெரியலு மின்செ யாரமும்
குருமணிக் கலன்களுங் குலவு வீதிவாய்
எரிமணிப் பூணினு னிடறி யேகினன்.

[ஆசையால் உருகுகின்ற தம் நாயகரோடு மாதர்ஊடி நீக்கிய வாசனை கமழ்கின்ற மாலைகளும் பிரகாசிக்கின்ற இரத்தின வடங்களும், நிறமமைந்த கற்கள்பதித்த அணிகலன்களும் நிறைந்து கிடந்த குண்டினபுரத் தெருவூடு, பிரகாசிக்கின்ற ஆபரணங்க ளணிந்த நளன் இடறி இடறி நடந்தான்]

என்று பாடினன் கம்பருக்குப் பின்வந்த பாண்டியன். இச்செய்யுளில் ஊடலால் உற்ற இடையூறே சொல்லப் பட்டிருககின்றது. ஆனால், கம்பருக்கு முன்னிருந்த தோலாமொழித்தேவர், கலவியையும் புலவியையும் கருத்துட்கொண்டு, போதன மாநகர் புக்கவர்

கூடுநர் கோவை மணிக்கலை யுக்கவும்
ஊடினர் சிந்திய வொண்சுடர் மாலையும்
மூடிய மூரி நெடுந்தெரு வொப்பவும்
ஊடுசெ லற்கரி தாயிட ருற்றார்.

[கூடினவர்களது கோவைமணி மேகலை அறுந்து உதிர்ந்தனவும், ஊடினவர் எறிந்த ஒளிமிகுந்த மாலையும் மூடிக்கிடந்த அப்பெரிய தெருவின்வழியாய்ச் செல்வதற் கியலாமல் வருந்தினர்]

எனப் பகன்றுள்ளார். எனினும், நைடதம் ஊடலாலும், சூளாமணி இணக்கு பிணக்கு இரண்டினாலும் மாலையும் மணிகளும் தெருக்களில் கிடக்க நேர்ந்தசெய்தி கூறினவேயல்லாமல் வரலாறு முழுவதும் நம் கண்முன் நடிப்பதுபோல் அவை காட்டவில்லை. சொல்லிய சொல் ஒன்றிரண்டினடியாக, அங்கம் களத்தோடு நாடகம் முழுவதும் நம்மனத்தே நடித்துக் கொள்ள வேண்டுமாயின் கம்பரின் செய்யுளே அவ்வுதவியைச் செய்துவைக்கும். மாடத்தகவயின் ஒரு மடமாது ஊடல்கொண்டொதுங்கியகல்வதும், நீடிய புலவியால் நைந்துருகி வாடிய அன்பன் அதனைத் தீர்ப்பதற்கு நிமித்தமொன்று சூழ்ந்தனனாய் மாலையைக் கொணர்ந்து அவட்குச் சூட்ட முயல்வதும், இளகாத உள்ளத்தளாய அவள் இவனையும் இவன் விளையாட்டையும் எள்ளினளாய் அம்மாலையை அகற்றி வீதிதாறும் வீசியெறிவதும், பிறகு புலவியின் பதம் பார்த்திருந்த நாயகன் சிறிதும் சலியானாகிப் பலவாறு முயன்று அவ்வூடலைத் தீர்த்ததும், தீர்த்தபின் இருவரும் சீதகளபசெழுஞ்சேற்றை ஒருவர் மீதொருவர் பொழிந்து களித்ததும், யாவும் முன்னிரவின் நிகழ்ச்சியாம். பின்னாள், பரியூர்ந்து பல அலங்கார மைந்தர்கள் வீதியின்கண் உலாவருவதும், வருமவர் குதிரை நடனகதியில் பயில்வுறு நடையும், இந்நடை இடையே உடைதர மாலைகள் கால்களைப் பிணிப்பதும், புரவிமீதமர்ந்தவர் இதனால் சிறிது திகைப்பதும், இனிப் பரிமாச்செலவு இயலாதென அவர் அரைமனதோ டிறங்குவதும், இறங்கியவர் நினைத்த கருமம் கருதி விரைந்து நடப்பதும், நடப்பவராங்கே சந்தனச் சேற்றில் வழுக்கி விழுவதும், விழுந்தவரெழுந்து எதிர்நின்ற மனை நோக்கி, “நன்றுநன்று, நின்னுள்ளிடம் வைகுவோர் இரவைக்கழித்த விதம் நன்று” என்று இளநகையரும்புவதும் நிகழ்த்தி இயக்குமே, கம்பரின் நாற்சீர் நாலடிக் கலிவிருத்த மொன்று.

அறையிற் புரிந்த காதல் இவ்விதம் அம்பலத்தில் வருவதோவென வியப்பீராயின் கம்பர், எதிர்வரும் காளையொருவனைக்காட்டி, “ஆம், ஐய, ஆவதொன்றே, இச் செம்மலை நோக்குமின், இவனது தோள்கள் ஏன் இவ்வளவு சிவந்திருக்கின்றன வென்று அறிவீரோ! வாட்போரும் மல்யுத்தமும் பயின்று வருவானல்லன், மற்று

குதைவரிச் சிலைநுதற் கொவ்வை வாய்ச்சியர்
பதயுகத் தொழில்கொடு பழிப்பி லாதன
ததைமலர்த் தாமரை யன்ன தாளினால்
உதைபடச் சிவப்பன வுரவுத் தோள்களே.

[நாண்முடிந்த வரியமைந்த வில்போன்ற நெற்றியையும் கொவ்வைக்கனிபோன்ற வாயையும்உடைய நாயகி, (குனித்த வில்லனையதன் நெற்றியை நெறித்து, கொவ்வைக் கனிபோன்ற வாய்துடிப்ப ஊடலுற்று)செம்பஞ்சியூட்டல் முதலிய கோலம் பெற்ற தாமரை போன்ற தாளினால் உதைத்திட இவ்வலியமைந்த தோள்கள் சிவந்து போயின]

மைந்தன் தோளும் புல்லியதன்று. மடவாள் உதையும் பலமன்று. ஆண்மகன் தோளின் வன்மைக்கும் மகளிவன் நொய்ய பெண்மைக்கும் பரிய வேண்டா. சீரடியூட்டிய செம்பஞ்சின் சுவட்டினால் இக்கோள் கூறும் குறி பொறித்தாள். செவ்வண்ணம் அவன் தோளில் வந்தவண்ணம் இவ்வண்ணம்.

T. N. சேஷாசலம்.



# அகப்பொருள் வரலாறு.

[236-ம் பக்கத் தொடர்ச்சி]

## பாங்கியிற் கூட்டம்.

தலைவியைத் தான் காணும்வழி இவ்வாறு அடைபடக் கண்ட தலைமகன் இனி அவளுடைய ஊருக்குச் சென்றேனும் அவளைக்கண்டு பேசவேண்டுமென்னும் பேராவாக் கொண்டவனாய், எவ்விதம் பிறரெவருங் கண்டறியாதபடி அவளைச் சந்திக்கலாமென்று பலவாறுன்னிப் பிறகு, வேட்டைமேற் சென்று வழிதப்பியவனைப்போல அந்தி நேரத்தில் அவ்வூரிடைச் சென்று. அவர்கள் உறைவிடத்தை எப்படியாவது விசாரித் தறிந்து பாங்கியையாவது கண்டு அவள் என்ன சொல்லுகிறாளென்று தெரிந்துவரத் துணிந்தான். துணிந்து, மறுநாள் அவன் ஒளிநீங்கி இருளணுகும் அந்திப்பொழுதில் செவ்வழியின் விலகிச்சென்று அவரது குறிச்சியையணுகி, சனவழக்கற்றதோர் ஒதுக்கு வழியே சென்று குன்றவாணர் சிறுகுடில் செறிந்த சீறூரை நண்ணிப் பிறர் காணாது அங்குமிங்கும் உலவித் திரிந்துபார்த்தும் அவன் கருதியதொன்றும் பலிக்கவில்லை. அதனால் ஏமாறிய உள்ளத்தனாய் அவன் அவ்வல்லிருளில் தன்னூருக்குத் திரும்பிவிட்டான்.

தன்னெண்ணம் ஒருசிறிதுங் கைகூடப் பெறாவிடினும் அவ்வாறே தொடர்ச்சியாய் அவன் வறிதே சென்றுசென்று திரும்பும்நாள்களில் ஒருநாள் மிகவுஞ் சோர்ந்தழுங்கிய உள்ளத்தனாய் அவன் திரும்புகையில் தன்னெதிரே ஒரு காலடிச்சத்தங் கேட்டுச் சற்றயலே யொதுங்கி மறைந்து நின்றான். அப்பொழுது அங்கே பெண்ணொருத்தி வரக்கண்டு உற்று நோக்கி அவள் தலைவியின் உயிர்ப்பாங்கியென்று அறிந்து மெல்லச்சென்று அவளை நெருங்கினான். காரிருளிற் கானகத்தே பயமின்றித் திரியும் மறக்குடியில் வந்த குறமகளாயினும், திடீரென்று ஒரு புதரினின்று வெளிப்பட்டு ஓராடவன் தன்னைக் கிட்டி நெருங்கக்கண்டு, அவள் சிறிது அச்சமுற்று, மங்குல்பரந்து தாரகையொளியும் தவிர்ந்ததால் அவனைத் தந்தலைவியின் அன்பனென்று அறியாது விரைந்துமுன் சென்றாள். அவனும் விரைந்து அவளைப் பின்தொடர்ந்து நெருங்கித் தாழ்ந்த குரலால், “நத்தங் கும்பிட்ட நறுங்குழல் நங்காய்! வேட்டைமேற் சென்று நான் ஒரு பொன்மானைக் கண்ணுற்றுப் பிடிக்க நெருங்குகையில் அது என்கைத் தப்பியோடிக் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டது. அதனைப் பின்தொடர்ந்து எங்குந் தேடியுங் காணாது சோர்ந்து களைத்து வழி தெரியாது இங்கு வந்துளேன். இரவுவந்திறுத்து இருளெங்கும் செறிந்தது. புயலும் விண்ணை மூடுகின்றது. இன்றிரா உம்மில்லிடைத் தங்கி உம்மன்னத்தை நுகர்ந்து என் சோர்வை அகற்றிக்கொள்ள நீர் மனமிசைந்துதவுவீராயின் உமக்குப் பெரும்புண்ணியம் உண்டு. என்னையொத்த நல்விருந்து உமக்குக் கிடைப்பதரிது.” என்றுரைத்தான். குரலாலும் கவர்பொருள்படப் பேசும் சொற்றிறத்தாலும் தலைமகனென்று உணர்ந்து, அவள் அவனை உடனழைத்துச் சென்று தங்குடிலினருகே ஒதுப்புறமாக நின்று, “ஐய, ஆராயாமலும் அஞ்சாமலும் நீர் மேற்கொண்டுள்ள செயலிது என்? கொடுவரியும், கோளரியும், மதகரியும் மலிந்துள்ள இக் காட்டினிடை இருட்காலத் திவ்வாறு நீர் வந்தால் தீங்குபல விளையுமே. இதையறிந்தால் உம்மையே பற்றுக்கோடென நம்பிவாழும் எங்கள் பூங்கொடி கவன்று வருந்தாளோ? ஏமாறியாது நீர் எமது இல்லிற் புகுவதுந் தங்குவதும் எவ்வாறியலும்? உண்மையை அறிந்தால் அவர்கள் எதுதான் செய்யார்? ஆனால் தங்குமிடந் தந்துதவாது நள்ளிருளில் உம்மைக் கையுதறிவிடுதலுந் தகாது. இருதலைக்கொள்ளி யெறும்பின் இன்னது செய்வதென்றறியாது திகைக்கின்றேன்” என்று நெறியினதருமையையும் தலைவியினதன்பையுந் தனதுபரிவையுங் கூறிப் பின்னும், “நீர் இங்கே நில்லாது அகன்று வேறெங்கேனும் இராத்தங்கி விடியற் காலத்தில் உம்மூருக்குத் திரும்புவதே நலம். இனி இவ்வெண்ணங் கொண்டு இவ்வாறு இங்குவாராதீர்” என மறுத்தகற்றினாள். அதைக் கேட்டு அவன் ஆற்றானாய் “நீரின்றிவாழா மீனென நீரின்றி உயிர்தரியேன் நான். அன்றியும் இக்காட்டுவழியிலுள்ள புல்லுக்கும் அறுகுக்கும் ஆம்பலுக்கும் பயந்தொதுங்கும் அடியன் அல்லேன் யான். உந்தலைவியின் முகமதியும் நகைநிலவும் வெளிப்படக் கண்டால் என்னகவிருளும் இப்புறவிருளும் ஒதுங்கிவிடும். ஆதலால் என்னைக் குறித்து நீர் சிறிதும் அஞ்சிக் கவலைப்பட வேண்டா.” என்றான். அதற்கு அவள் “உமக்கும் எமக்கும் வருமேதங் கருதி நான் என்ன சொல்லி மறுப்பினும் நீர் இவள் தோள் நசையால் நான் சொல்வதைச் செவியேற்காது தள்ளுகின்றீர். நீர் விரும்பிய வண்ணம் நடவாது மறுத்திடின் ஆற்றீர் என்றுணர்ந்து நான் இசையாநின்றேன். இனி அவளுக்குத் தீவினையேன் உரைப்பதென்?” என்று கேட்டாள். அதற்கொன்றும் மறுமொழி கொடாது அவன் வருந்தி வாளாநிற்ப அவனை ஆற்றுவிக்கக் கருதிய பாங்கி “உம் மூரிலுள்ளார் இராக் காலத்தில் வெளிப்போந்து விளையாடுங்கால் எவ்விடத்து எம்மலர்சூடி எவ்வாசனைச்சாந்து பூசிச்செல்வது வழக்கம்?' என்று கேட்டாள். அதன் குறிப்பையறிந்து அவன், “எந்நாட்டவர் அணியியலையறிந்து உமக்காவதென்? உந்நாட் டரிவையர் ஆடிடம், அணிசாந்து, வேய்மலரிவற்றை நீ தெரிவித்தால் இரவுக்குறி விரும்பிய எனக்குப் பேருபகாரமாய் இருக்கும்” என்று அவளை எதிர் வினவினான். அதற்கவள், “யாம் இரவில் விளையாடுமிடம் அதோவுள்ள வேங்கை மரத்தடியில். யாம்பூசுவது சந்தனச்சாந்து, சூடுவது குவளைப்போது.” என்று குறியிடத்தையும் அடையாளங்களையுங் கூறி, “இன்று நீர் உம்பதிக்கேகி நாளையிரவில் வந்தால் உமதிச்சையை முற்றுவிக்கின்றேன். இப்போது நான் போய்த் தலைவிக்கு உம்வரவையும் விருப்பையு முணர்த்தி அவள் கருத்தையு மறிந்து வருகின்றேன். சற்று இங்கேயிரும்.” என்று சொல்லித் தான் தலைவியிடஞ் சென்றாள்.

விரைந்துசென்று வீட்டினுட் புகுந்து தலைவியைக் கண்டு பாங்கி அவளைத் தனித்தொருபுறம் அழைத்துக் கொண்டுபோய், “நீ வளர்க்குஞ் சிறுமானைத் தேடிச் சென்று திரும்புகையில் உன்னுடன் முன்கூடி விளையாடிய பெருமானைக் கண்டேன்.” என்று சொன்னதுந் தலைமகள் உவகைபொங்க “எங்கு எங்கு” எனக் கேட்டாள். அதற்குப் பாங்கி, “உன்னைக் காணவிரும்பி நமது குடிலின் பக்கத்தே அவர் வந்திருக்கின்றார். நான் என்ன கூறி விலக்கியும் அவர் போவாரல்லர்.

வாளாவு

நஞ்சே உமிழினும் வெஞ்சூரணங்கினும் நள்ளிரவில்
அஞ்சேன் வருவெனென்பார் என்சொல்வேன்
நானுன் அன்பருக்கே?

என்று அவனாற்றாமையைக் கூறி விருப்பத்தை அவளுக்கு ஏற்பித்தாள். அவனுக்கு நேருந் தீங்கை

நினைத்து அவன் இரவில் வருவதற்கிசைய மனமிலளாயினும் தலைவி மேலொருநாள் தான் அருவியிற் புனலாடும்போது தன்னை நீரிழுத்துச் செல்லக்கண்டு அவன் துடுமெனப்பாய்ந்து தன்னைப் பிடித்தெடுத்துக் கரையிலுய்த்து உயிரளித்த உதவியை நினைந்து மறுது உடனே அதற்குடம்பட்டாள். அவளிசைந்ததைப் பாங்கி சென்று அவனுக்கியம்பி, 'ஐய, இரவில் வெகுநேரமாய் விட்டது. இனி ஊருக்குத் திரும்புதல் உசிதமன்று. இதோ இந்தத் தேக்கங்கல்லையில் தேவருமுண்டறியாத் தினைமாவுந் தீந்தேனுங் கொணர்ந்துள்ளேன். இதையுண்டு நான் காட்டிய குறியிடத்தே சென்றிரும். வீட்டிலெல்லோரும் படுத்துறங்கியதும் தலைமகளை நான் அங்கே அழைத்து வருகிறேன்." என்றுரைத்துத் தேனளாவிப்பிசைந்த தினைப்பிண்டியை அவன் கையிற் கொடுத்துத்தான் மீண்டு மனையுட் சென்றாள்.

அவன் அவ்வாறே சென்று அந்த வேங்கை மரத்தடியில் நிழல்மறைவிலே தங்கியிருந்தான். அப்பொழுது அதன்மீதுறங்கிய மயிலினம் துயில்கலைந்து சிறகடித்துக் கூவக்கேட்டுப் பாங்கி அவன் அங்குவந்ததை உணர்ந்தாள். உணர்ந்து தலைமகளை அழைத்துச் செல்லக் கருதி அவள் பக்கத்திலே படுத்திருந்த தாய் துயின்றிட்டாளோ இல்லையோவென்று அறிவதற்காகத் தலைமகளைக் கூப்பிட்டு, "மதிகண்டு மலரும் முழுநீலக் கண்ணீ. மதம்பட்ட மழகளிறொன்று நாம் விளையாடும் மல்லிகைப் பந்தரையும் மாமணி யூசலையும் குலைத்து சுரபுன்னைச் சூழலையும் தொலைக்கின்றதே." என்று சொல்ல, அதைக்கேட்டும் அன்னையும் பிறரும் எழாது துயிலக் கண்டு, அவளை மெல்ல அழைத்துச் சென்று குறியிடஞ் சேர்த்துத் தலைவனைக் காட்டி அவனருகே அவளை விடுத்துத் தான் மீண்டு மனையகத்துற்றுத் தலைவியின் வெளிப்போக்கை ஒருவரும் அறியாவண்ணம் அங்கே கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இங்கே, தலைவியைக் கண்டதும் தலைமகன் ஆவலுடன் அருகிற் சென்று அவளை மார்போடணைத்து நெருங்கப் புல்லித் தனது ஆற்றாமைதோன்ற பொம்பல் வாசகம் பல மொழிந்து, அவள் அஃகி வழங்கிய சின்மொழிகளை அமிழ்தெனச் செவியின் மாந்தி, ஐவாயரவின் அவளின்ப நலனையுண்டு, அதனாராமை தோன்ற,

> மலையிடைப் பிறவா மணியே என்கோ?
> அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?
> யாழிடைப் பிறவா இசையே என்கோ?
> தாழிருங் கூந்தல் தையால் நின்னை

என்று பலவாறு அவளைப் பாராட்டிக் கொண்டாடி "நீ இனி மனையிற் சென்று பாயல் கொள்வாய். நான் நாளை இதே நேரத்தில் இங்கு வருகின்றேன். இருளென்றுங் காட்டு வழியென்றுங் கவலையுறாதே. எம்மூருக்கும் உம்மூருக்குங் கூப்பிடு தூரங்கூட இல்லை. எம்மலைச் சாரலில் வள்ளிக் கிழங்கு அகழ்ந்தெடுப்பவர் அக்குழியினின்றெடுத்து எறியும் மாணிக்க மணிகள் கிடந்தொளிர்வ கண்டு கனலெனக் கருதி உம்மூர்ச்சிறார் இரவிடை கைகாய்த்துவர். ஆகையால் இங்குவருதல் எனக்கு அரிதன்று." என்றுரைத்து அவளைப் போகவிடுத்தான்.

பயின்ற வழியையறிந்த அவன் முன்னே செல்லத் தான் துணையாக அவளுடன் பின்சென்று மனையை அணுகலும் அவள்வரவை எதிர்பார்த்து நின்ற பாங்கி அவளை அழைத்துக்கொண்டு வீட்டினுட்சென்று திருந்தமளியிற் சேர்த்தித் தான் மீண்டும் வெளிவந்து தலைவனையுற்று "இனி இங்கு இவ்வாறு வருமெண்ணத்தை விட்டு வரைந்துகொள்ளும் வழியைத்தேடும். தாமதியாது இவ்விடம்விட்டுப் போய்விடும். இனி இவ்வயின் நிற்றலும் ஏதம்" என்று அவனை வரவு விலக்கி வரைவு கடாவினள். அப்பொழுது அவன் "தலைவியும் யானும் நெய்யும் பாலுமென நெஞ்சம் கலந்தநிலைமையைக் கண்டும் நீ பிரையிட்டுப் பாலைக் கெடுப்பது போல் இவ்வாறுரைத்து என் மனதைக் கலக்கல் தகாது. அறிந்தவரைச் செல்லவிடும்போது 'போய்வா' என்பது மரபு. அவ்வாறன்றி என்னை நீ 'போ' வென்று சொல்லி 'வா'வென்று உரைத்தாயில்லை. இஃதென்ன வன் கண்மையோ?" என்று மனம் நொந்துரைத்து விடைகொண்டான். அப்பொழுது அவள் "ஐய, உம்மைக் குறித்து எந்தலைவி மிகவுங் கவலைப்படுகின்றாள். அதனைத் தீர்க்க நீர் நும்பதி சேர்ந்ததும் கொம்பூதிக் குறிகாட்டும்" என்று கூறி விடைகொடுத்துத் தான் மீண்டு சென்று மனையகம்பும் புக்காள்.

தலைமகனும் உடனே அவ்விடம் விட்டகன்று தனித்தொதுங்கி இருந்ததோர் பலவம்பொழிலைக் கண்டு, அதில் மறைந்து தங்கித்துயில் கொள்ளாது இரவைக் கழித்து வெள்ளி முளைத்ததும் வெளிப்பட்டுத் தன்பதிக்கு மீண்டான்.

இவ்வண்ணம் இரவில் தலைவியின் ஊரிடைச்சென்று பாங்கியின் துணையால் அவர்தம் மனையினெல்லையை இகவாது அதன் அருகாமையினுள்ளதோர் குறியிடத்தில் அவன் தலைவியுடன் கூடிய கூட்டம் 'இரவுக் குறி' எனப்படும்.

K. இராமரத்நம் ஐயர்.


ஆர். பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்,

எழுதிய நான்கு செந்தமிழ் நூல்கள்.

தமிழ்நாட்டு நவமணிகள்:—இதில் (1) ஆதிரையார் (2) விசாகையார் (3) மருதியார் (4) கோப்பெருந்தேவியார் (5) மணிமேலையார் (6) கண்ணகியார். (7) புனிதவதியார் (8) மங்கையர்க்கரசியார் (9) திலகவதியார் முதலிய ஒன்பது சரிதைகள் உள்ளன. விலை அணா 8.

திருவள்ளுவர் நூல்நயம்:—ஓர் அரிய பெரிய ஆராய்ச்சி நூல். திருவள்ளுவர் பெருமை, திருக்குறள்—பொது நூல், சமயப் பொது நூல், அறத்தின் திறம், அரசியல் முறை, இன்ப இயல், திருக்குறளின் உவமைத்திறம், திருவள்ளுவரும் பரிமேலழகரும் ஆகிய எட்டு அரிய பெரிய வியாசங்களையுடையது விலை ரூபா 1.

சிலப்பதிகார விளக்கம்:—இது ஒரு சிறந்த ஆராய்ச்சி நூல். சிலப்பதிகாரக் கதை, சிலப்பதிகார ஆராய்ச்சி ஆகிய இரண்டு பாகங்களையுடையது. இந்நூலின் இரண்டாம்பாகம், நூலாசிரியர் பெருமை, அரச நீதியும் அரசியலும், ஆரிய அரசரும் தமிழ அரசரும், கண்ணகியின் கற்பின் திறம், வினையின் பயனே பயன், பண்டைக்காலத் தமிழ் மக்கள் நாகரிகம், சிலப்பதிகார நூல் நயம் ஆகிய ஏழு வியாசங்கள் ஆராய்ச்சி முறையில் எழுதப்பட்டுள்ளன. விலை ரூபா 1-8-0.

சிலப்பதிகாரக் கதை மாத்திரம் விலை அணா 8.

ஒற்றுமை:—குறைந்த சந்தாவில் சிறந்த மாதப் பத்திரிகை. அரிய கட்டுரைகளை யுடையது.

வருட சந்தா உள்நாடு ரூ 1.
வெளி நாடு ரூ 1½.

மாதிரிப் பிரதி இனம்.

ஒற்றுமை ஆபீஸ்,
சைதாப்பேட்டை, சென்னை.




# வானசாஸ்திரம்

[174-ம் பக்கத் தொடர்ச்சி]

## III

## சூரியகிரகக் கூட்டம்

மேற்சொல்லிய விதம் மனதினால் நினைத்துக் கொள்ள முடியாதபடி மிக்க பெரியனவான இக்கோளங்கள் சூரியனிலிருந்து கற்பனைக்கு மடங்காத தூரங்களில் நின்று நிலைவழுவாது தம்மிற்றாமே சுழன்றுகொண்டு அச்சூரியனையும் சுற்றி ஓடிக்கொண்டிருக்கின்றன. இவைகள் சுற்றிவரும் பாதைகளின் வடிவம் என்ன? இவைகள் சுற்றி வருகின்றனவென்பதிலிருந்து இவைகள் செல்கின்ற பாதை வட்டமானதென்று எவரும் எண்ணலாம். ஆனால் அவை சரியான வட்டங்களல்ல. நீண்ட வலயங்கள் என்று சொல்லலாம். அதாவது, இந்த வலயங்களின் மையத்தின் ஊடாகக் கோடுகள் வரைந்தால், ஒரு கோடு மற்றெல்லாக் கோடுகளைவிட நீண்டதாகவும் மற்றொரு கோடு எல்லாவற்றைப் பார்க்கிலும் சிறியதாகவும் இருக்கும். இது ஆங்கிலத்தில் ஓவல் (Oval) வடிவம் என்று சொல்லப்படும். கிரகங்களின் பாதைகள் இந்த வடிவம் என்பதற்கு அத்தாக்ஷிகள் அனேகம் உண்டு. அது மாத்திரமன்று. இந்த வடிவமாய்த்தானிருக்க வேண்டுமென்பதற்குக் காரணமும் உண்டு. அவைகளை இவ்விடம்விளக்குவது அவசியமில்லை.

இது நிற்க. சூரியனும் கிரகங்களும் சுழற்சி உடையன வென்று சொன்னோம் அவ்விதம் அவை சுழல்கின்றனவென்பதை நாம் எவ்விதம் உணரமுடியும். பூமி சுழல்கின்றது என்றால் அனேகருக்கு நம்பக் கூடாததாய் இருக்கும். அனேக ஆண்டுகளாய் மனிதர்பூமியைச் சுற்றிச் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் யாவும் ஓடிக்கொண்டிருக்கின்றன வென்று எண்ணியிருந்தார்கள். அவ்வித எண்ணம் உண்டாவது இயல்பே. நாம் இரவில் ஆகாயத்தைப் பார்த்தால் அங்கே தோன்றுகின்ற நக்ஷத்திரக்கூட்டங்கள் கிழக்கிலிருந்து மேற்குமுகமாய்ப் போய்க்கொண்டிருக்கிறதாகக் காண்கின்றோம். பகலில் சூரியனும் அவ்விதமே செல்கின்றது. ஆனால் இராக்காலத்தில் எல்லா நக்ஷத்திரங்களும் அவ்விதம் ஓடுவது இல்லை. வடக்கில் உள்ள ஒரு நக்ஷத்திரம் நிலைபெயராமல் இருக்கிறது. இதற்குத் துருவன் என்று பெயர். இதை மையமாக வைத்து ஆகாயமண்டலம் சுழல்வதுபோற் றோன்றுகின்றது. ஆகவே ஆகாயமண்டலமே சுழல்கின்றது என்னும் கொள்கை அனேக ஆண்டுகளாக மனிதர் மனதில் குடிகொண்டிருந்தது. இது சரியான கொள்கையல்லவென்று காப்பர்னிகஸ் என்பவர் கண்டித்துப் பூமியே சுழல்கின்றது என்று காட்டினார். இவர் கருவிசாதன உதவியின்றி ரூபித்தது பின்னால் தூரதிருஷ்டியின் உதவியால் உண்மை என்று ஏற்பட்டது. தூரதிருஷ்டியினால் சூரியனையாவது மற்றைய கிரகங்களையாவது கவனித்தால் அவைகள்சுழன்றுகொண்டிருக்கின்றனவென்பது புலப்படும். அவ்விதம் இவைகள் எல்லாம் சுழற்சியுடையன வென்று ஏற்படும்போது பூமியும் சுழல்கின்றது என்றே ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

பூமி இருபத்துநான்குமணி நேரத்தில் தன்னைத்தான் ஒருதரம் சுழன்றுகொள்கிறது. இந்தச் சுழற்சியின் காரணமாக இரவு பகல் என்ற வித்தியாசம் ஏற்படுகிறது. இது ஒருநாள் என்ற காலவரையுள் அடங்கும். சூரியன் சற்றேறக் குறைய இருபத்தாறு நாட்களில் சுழன்று வருகின்றது. செவ்வாய் இருபத்திநாலு மணி நேரத்திலும் வியாழனும் சனியும் பத்துமணி நேரத்திலும் சுழல்கின்றன. யூரானஸ் நெப்டியூன் ஆகிய இரண்டு கிரகங்களின் சுழற்சிகாலங்களைப்பற்றிச் சரியான முடிவு இன்னும் ஏற்படவில்லை யாயினும் பத்து அல்லது பன்னிரண்டு மணி நேரத்தில் அவைகளும் சுழல்கின்றனவென்னும் துணிபு பலரால் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. எஞ்சிய இரண்டு கிரகங்களின் சுழற்சிக் காலங்கள் இதுவரையிலும் சந்தேகமறத் தீர்மானிக்கப் படவில்லை.

பூமியும் மற்றைய கிரகங்களும் சூரியனைச் சுற்றியோடி வருகின்றன வென்பதற்கு அனுமானப் பிரமாணமேயன்றி அத்தாட்சிப் பிரமாணமும் உண்டு. சூரியன் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு இராசியில் பிரவேசிக்கிறதாகத் தோன்றுகிறது. அதாவது ஆகாயத்தில் இராசிகள் நிற்கின்ற வீடுகளில் சூரியன் நகர்ந்து செல்கின்றது. இந்தத் தோற்றம் அவ்விதம் சூரியன் நகர்வதால் உண்டாவதல்ல, ஆனால் பூமியே சூரியனைச் சுற்றி ஓடுவதால் உண்டாகும் தோற்றம் இது. அனுமானப் பிரமாணம் அத்தாக்ஷிப் பிரமாணமாகச் சற்றுஏறக்குறையத் தொண்ணூறு வருஷங்களுக்கு முன் ஒன்றும் எட்டவில்லை. அதற்குமுன் பூமி ஆகாய வெளியில் சஞ்சாரஞ் செய்து வருவதாயிருந்தால் நக்ஷத்திரங்கள் தத்தம் நிலையில் பெயர்ந்து தோன்ற வேண்டுமே; அவ்விதம் அவைகள் பெயர்வதாய்க் காணப்படவில்லை; ஆகவே பூமி அவ்வித சஞ்சாரம் செய்கிறது என்று எவ்விதம் கொள்ளலாம் என்னும் கேள்விக்கு விடை பகர முடியாமல் இருந்தது. தூரதிருஷ்டியின் உதவியால் இந்தச் சந்தேகமும் நிவர்த்தியாய்விட்டது. பெசெல் (Bessel) என்னும் ஒரு வானசாஸ்திரி 1840-ம் ஆண்டளவில் நக்ஷத்திரங்களில் ஒன்று ஒரு வருஷகாலத்தில் ஒரு சிறு வட்ட மிடுவதைக் கண்டார். அவர் காலத்துக்குப்பின் இதேவிதமாக மற்றும் நாற்பத்து மூன்று நக்ஷத்திரங்கள் நிலை பெயர்ந்து சிறு வட்டங்களிடுவதாக வானசாஸ்திரிகள் பலர் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவ்விதம் வட்ட மிடுவதாகத் தெரிகிறதற்குக் காரணம் பூமி சூரியனைச் சுற்றி வட்டமான பாதையில் செல்லுவதேயாம். அவ்விதம் பூமி ஆகாய வெளியில் நிலைபெயராதிருந்தால் நக்ஷத்திரங்கள் இவ்விதம் நிலைபெயர்ந்து தோற்றாது. நாம் வேகமாய் ஒரு வண்டியில் போகும்போது பாதையிலுள்ள பொருள்கள் ஓடுவது போலத் தோற்றுகின்றது போலவே பூமி சூரியனைச் சுற்றி ஓடிவருவதனால் நக்ஷத்திரங்களும் வட்டமிடுவதாகத் தோற்றுகின்றன.

இப்போது கிரகங்களின் சுற்றோட்டக்காலங்கள் என்ன என்பதைக் கவனிப்போம். பூமி சூரியனைச் சுற்றிவர ஒருவருஷம் அல்லது $365\frac{1}{4}$ நாட்கள் செல்கின்றன. இந்தக் கணக்கின்படி மற்றைய கிரகங்களின் சுற்றோட்ட காலங்கள் என்ன என்பதைக் கீழ்வரும் குறிப்பிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| புதன் | ஏறக்குறைய | 88 நாள். | |
| சுக்கிரன் | ,, | 226 ,, | |
| செவ்வாய் | ,, | 1 வருஷம் | 321 நாள் |
| வியாழன் | ,, | 11 ,, | 313 ,, |
| சனி | ,, | 29 ,, | 167 ,, |
| யூரேனஸ் | ,, | 84 ,, | 7 ,, |
| நெப்டியூன் | ,, | 164 ,, | 284 ,, |

கிரகங்கள் சூரியனைச்சுற்றி ஓடுவதுபோல் சந்திரன் பூமியைச் சுற்றியும், மற்ற உபக்கிரகங்கள் தத்தம் கிரகங்களைச்சுற்றியும் ஓடுகின்றன. இவைகளுக்கும் சுழற்சி உண்டு, இவைகளும் உருண்டை வடிவமானவை. இவைகளின் பாதைகளும் கிரகங்களின் பாதைகளைப்போல நீண்டவட்டங்களாகிக் கிரகங்களுக்கும் சூரியனுக்குமுள்ள தொடர்ச்சிக்கு ஒத்திருக்கிறது. ஆனால் கிரகங்களுக்கும் உபக்கிரகங்களுக்கும் உள்ள சம்பந்தத்தில் ஒரு வித்தியாசமுண்டு. சூரியன் தானாகவே ஒளிகொடுக்கின்றது. கிரகங்களுக்குத் தம் ஒளி இல்லை. அவைகளின் பிரகாசம் சூரிய வெளிச்சம் தம்மேல் படுவதால் உண்டாகும் பிரகாசமே. உபக்கிரகங்களும் பிரகாசிப்பது சூரிய வெளிச்சம் அவைகளின் மேற்பட்டுப் பிரதிபலிப் பதினாலேயே.

கிரகங்களின் பாதைகளின் வடிவத்தைப் பற்றிச் சொன்னோம். இப்பொழுது இவைகள் எவ்விதம் அமைக்கப்பட்டிருக்கின்றன வென்பதைக் கவனிப்போம். சூரியன் நடுவிலிருக்க அதைப் பூமி சுற்றி வருகிறது. பூமி சுற்றி வரும் பாதையை எடுத்துக் கொண்டால் மற்றக் கிரகங்களின் பாதைகள் இதனோடு ஒரேமட்டத்தில் இருக்கின்றதா அல்லது, ஓர் ஒழுங்குமின்றி குறுக்கும் மறுக்குமா யிருக்கின்றனவா? கிரகங்களினுடைய பாதைகள் ஒரேமட்டமாய் இருக்கவேண்டு மென்பதற்குச் சில காரணங்கள் இருந்தபோதிலும் அவைகள் அவ்விதம் ஒரே மட்டமாய் இல்லாது மட்டத்திலிருந்து சற்று விலகி யிருக்கின்றன. ஒவ்வொரு கிரகங்களின் பாதையும் எவ்வளவு விலகியிருக்கின்றது என்பதும் கணிக்கப்பட்டிருக்கிறது.

சூரியகிரகக் கூட்டங்களின் அளவு அவைகளின் சுற்றோட்டம் அமைப்பு இவைகளைப்பற்றி இதுவரையிலும் சொல்லி வந்தோம். இந்த மகத்தான அண்டங்கள் எல்லாம் ஆகாயவெளியில் அந்தரத்தில் தத்தம் நிலைவழுவாது எவ்விதம் நிலைத்திருக்கின்றன வென்னும் கேள்வி எல்லார் மனதிலும் உதிக்கும். இந்தக் கேள்விக்கு விடைபகர முடியாது. இது சிருஷ்டியின் இரகசியங்களில் ஒன்று. "அகிலாண்டகோடி எல்லாம் தன்னருள் வெளிக்குள்ளே தங்கும்படிக்கு" வைத்த வொன்றுண்டு என்பதே நாம் சொல்லத்தக்கது. ஆனால் எவ்வகையில் இவை நடந்துவருகின்றன என்பதைப்பற்றிய அறிவு மட்டும் நமக்கெட்டி யிருக்கிறது.

சிருஷ்டியிலுள்ள வஸ்துக்கள் எல்லாம் ஒன்றையொன்று தத்தமிடத்து வந்துபொருந்தும்படி இழுத்துக்கொள்ளும் ஆகருஷ்ணசக்தி உள்ளனவென்பது இப்போது சந்தேகமற ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஒரு உண்மை. இந்த உண்மையை திருஷ்டாந்தப்படுத்தியவர் சாகசாக் நியூட்டன் என்னும் பிரபல ஆங்கிலக் கணிதசாஸ்திர நிபுணர். இவர் இதன் உண்மை உணரவந்தவழி பின்வருமாறு: ஒருநாள் ஆப்பிள்பழம் ஒன்று மரத்திலிருந்து கீழே விழுவதைப் பார்த்தார். பார்த்ததும் அந்தப்பழம் ஏன் பூமியை நோக்கி விழவேண்டும், ஏன் மேற்பக்கமாகச் செல்லப்படாது என்பதைபற்றி யோசிக்கத் தொடங்கினார். சாதாரணமாகப் பொருள்கள் பூமியை நாடிவிழுந்து கொண்டிருக்கிறதை நாம் எல்லோரும் பார்க்கிறோம். அவ்விதம் விழுவதுதான் சகஜம், அதைவிட்டு ஏன் மேல் நோக்கிப் போகாதிருக்கின்றன வென்பதைப்பற்றி யோசிக்கப் புகுவது வீண் விசாரணை என்பது அநேகருக்குத்தோன்றும். நியூட்டனும் அவ்விதம் எண்ணிவிட்டிருந்தால் தற்கால சாஸ்திர வளர்ச்சிக்கு ஏதுவாயிருந்த உண்மை ஒன்று தெரியாமற் போயிருக்கும். நியூட்டன் இதைப்பற்றிய விசாரணையைப் பழம் பூமிக்கு விழுவதிலிருந்து ஆரம்பித்து ஆகாயவெளியில் சந்திரன் பூமியைச் சுற்றி ஓடும் ஓட்டம் முதலியவற்றையும் ஆராய்ந்து சிருஷ்டியிலுள்ள வஸ்துகள் எல்லாவற்றிற்கும் ஒன்றை ஒன்று தன்பால் இழுக்கும் சக்தி இருக்கிறது என்பதை ஸ்தாபித்தார். இந்தச் சக்தியின் காரணமே பழம் பூமியில் விழுவதும் சூரியனைச்சுற்றிக் கிரகங்கள் நிலைவழுவாது சுற்றி ஓடுவதும் ஆகும்.

# அரசியர் மலர்வன மல்லிகை

## John Ruskin's
## Lilies of Queens' Gardens.

(234-வது பக்கத் தொடர்ச்சி.)

பெண்களுக்கியன்ற இடமும் செல்வாக்கும், அவரது அரசாட்சியின் தன்மையும் ஈதென இதுவரை முயன்றுரைத்தேன். இனி, அவர் சமக்கமைந்த நிலை யெய்தி வழிமுறை வழுவாது வினையாற்றும் தகுதியுற எத்தகைய கல்விப் பயிற்சி அவர்களுக்கு உதவியாய் நலம்வளர்க்கும் என்பது பற்றிச் சிறிதிங்கு ஆராய்வோம்.

பெண்கள் தன்மையைப் பற்றிய முடிவான வாய்மை, நான் இதுவரை முயன்று காட்டிய அதுவே என்று ஏற்பீரேல் மடவார் தம், தொழிலிற்கும் நிலைமைக்கும் ஏற்றவாறான கல்வி முறை எதுவெனத் துணிதல் அரியதொரு கருமமன்று.

மெய்நலம் திரண்டு வளரவும் அரும்பிய அழகு உயிர்ப் பொலிவுடன் மலரவும், போதிய தேகப் பயிற்சி அவர்க்குத் தருதல் ஆண்பாலார், பெண்பாலார் மாட்டு ஆற்ற வேண்டிய கடமைகளில் முதன்மை யானதாகும் என்பதை அறிவுடைப் புருடன் எவனும் மறுக்க மாட்டான். உடல் சிறிது உரமுறாது பெண்ணுருவம் மென்மையும் அழகும் பெற்றதில்லை. தோலும் எலும்புமாய தேகம் அழகுடன் தோன்றுவ துண்டோ? பெண்மை சிறக்கவும் அதன் வன்மை பெருகவும் தேகப்பயிற்சி மிகமிக அவசியம். ஆனால் அப்பயிற்சியும் அளவுகடந்து, நிகழ்வதும் கூடாது, தேகப்பயிற்சியுடன் நிற்றலும் போதாது. உடல் வன்மையால் மாத்திரம் அழகு சிறந்ததில்லை. உள்ளத்தை விரியச்செய்யும் மனப்பயிற்சியும் பெண்கள் பெறவேண்டும். ஆதலால் ஆணேபோல் பெண்களுக்கும் தேகப்பயிற்சி பெறவும் மனப்பயிற்சி பெறவும் எல்லா உரிமையுமுண்டு என்பதைத் தெரிவீர்...........

பெண்களின் உள்ளத்தை நீராகி எருவாகி வளர்ப்பதும் உவகைஉணர்ச்சியே(Vital feelings of Delight)யாகும். இயற்கையோடியன்ற உவகை யுணர்ச்சிக்கு இடையில் வளராத சிறுமியிடம், அழகும் உயிர்ப் பொலிவும் காணுதல் முயற்கொம்பாம். சிறுமி யொருத்தியின் இயற்கை வளர்ச்சிக்கு இடையே நீ வகுக்கும் தடையும், விதியிது விலக்கிது என்ற வரையறுப்பும், அவள் எழிலைக்கொல்ல, அவளது உருப்புதோறும் அவ்வடு அழியாதவகையில் பதிந்துவிடுகிறது. அதைப் பின்னர் பார்க்கவும் நம்கண் கூசும். இத்தகைய நிபந்தனையில் வாழும் சிறுமி ஒளியை யிழந்துவிடுகிறாள். அவளிடம் நாம் காணுவதும், உயிர்ப்பொலிவிற்குப் பதிலாக வாடிய சவக்குறியே. எனவே உடல்வலியிலும் அழகிற்கு முக்கியமானது மனதின் வளர்ச்சியே.

மாதரார்முகத்தின் மாசிலாவனப்பு யாதனின், உள்ளத்தில் முன்னாள் பண்பும் பயனு முடைத்தாய பலவாண்டுகள் கழித்தவோர் நினைவின் அழகு வெளித்தோன்றுவதாம். அதுவன்றி இனிவரும் நாட்களெல்லாம், இன்னும் பலபல ஒண்பொருள் பெற்றுத்தாம் பிறர்க்களிக்கும் பாக்கியம் உறுவதற்குளதென விளையும் நப்பிக்கைக் கிடனுய வீறுடைக் குழந்தைத் தன்மை இலங்குவதுமல்லாது வேறொன்றுளதோ? இந்தவிதநம்பிக்கை இருக்கும்வரை அவர் முதுமை என்பது ஒரு நாளும் எய்தார். நிரந்தரமாய் நிலைத்திருக்கும் இளமையிது.

> முன்னாள் முற்றிய நல்வினைத் தேசும்
> பின்னா ளெய்தும் பெரும்பயன் நினைவும்
> அகத்துள் விளைய அழகினின் தோற்றம்
> முகத்திற் காட்டும் முறையது வனப்பு.

எனச் சாற்றுவார் கவிகள்.

எனவே பெண்கள்மாட்டு நீங்கள் செய்யவேண்டிய கருமமும் இரண்டு. முதன் முதலாக அவர்களுக்குத் தேகப்பயிற்சி தந்து உடல் உரம் பெறுமாறு செய்தல் வேண்டும்.பின்னர்த் தரவேண்டுவது,அவர் உளங்கனிந்து குணம் சிறக்கச் செய்யும் மனப் பயிற்சியாகும். பின்னதைச் செய்ய வல்லது கல்வியே.

மாதரார் அறிவளிக்கும் கல்விகற்பது ஏனெனில், ஆடவர் புரியும் தொழில் தெரிந்து அவருக்கு உற்ற துணையாய் எவ்விடத்தும் நின்று வாழ்க்கையை இனிது நடத்துவதற்குத் தான். மங்கையர் கல்வி பெறுவது வாய் விவகாரம் செய்வதற்கல்ல. விஷயத்தின் வாய்மை உணர்ந்து, நல்லது இது கெட்டது இது என்று அவர் துணியத் துணைசெய்யவே கல்வி வேண்டும். பாஷை பலகற்று, வந்தவரை வாய்கொண்டு மருட்டிவிடும் புலமை பெண்ணின் பெருமையையோ உள்ள நிறைவையோ காட்டிவிடாது. ஆனால் தன் வீடுவந்த விருந்ினர் ஒருவருக்கு நல்வரவுகூறி வரவேற்று உபசரிக்கவும், அவருடன் வார்த்தையாடி அவர் கூறுவது அறியவும் மறு மொழி இயம்பவுந்தான் பாஷைப்பயிற்சி வேண்டும்.

பௌத்திக சாஸ்திரங்களில், இதுவென்றும் அதுவென்றும் எதுவொன்றும் பயின்றிருக்க வேண்டுமென்பது மாதர்தம் யோக்கியதைக்கும் பெருமைக்கும் அவசியமேயில்லை. ஆனால், விஷயங்களை அவள் ஆழ்ந்துணர்ந்து ஐயம் திரிபின்றிக் கருதவல்ல பயிற்சி பெற்றவளாதல் வேண்டும். இயற்கை விதிகளின் (Natural Laws) நிரந்தரத் தன்மையும், நீக்கமற்ற நிலையையும், நேர்மை யழகையும், அவைதம் அர்த்தம் யாதென்பதும் தெரிந்துகொண்டு, சாஸ்திரத் துறைகளில் யாதானுமொன்றைத் தொடர்ந்துசென்று அகங்காரங் கழியுமாறு அமைந்த அவ்வடக்கமே உறையும் தாழிடம் எய்தும் வரைப் படரவேண்டுவதோ இன்றியமையாதது. அத்தகைய தாழ்மைபுகட்டும் அடக்கத்திற்கு எய்தவல்லார் அறிவிற் சிறந்தோரும் வீரம் மிகுந்தோருமே யாவர். பலகற்றோம் யாமென்று தற்புகழ்ந்த பேரெல்லாம் பின்னும் கற்கக் கற்கத் தம் கல்லாமையே கண்டு, அலகிலாப் பெருந்துறையிற் சிறுகற்கள் பொறுக்கும் பாலகரே தாம் எந்நாளும் ஆவது விளம்புகின்ற இடமன்றோ அது!

இந்தப் பட்டினம் எந்த இடத்தில் இருக்கின்ற தென்றும், சரித்திர சம்பவங்கள் எதுவெது எந்தக் காலத்தில் நிகழ்ந்தன வென்றும், பேர்படைத்த பெருமக்களின் கணக்கும் அவளுக்குத் தெரிந்தாலென்ன, தெரியாமற் போனாலென்ன?—மகளிரையோர் அகராதியாக மாற்றி விடுவதற்கல்லவே அவர்கள் படிக்கின்ற படிப்பு. சரித்திரம் கற்பாளென்றால், அதனுள் தனது ஆன்ம உணர்ச்சியைச் செலுத்தக் கூடியவளாய் இருத்தல் வேண்டும். பரிவுடன் பாராட்டவேண்டிய சம்பவங்கள் எத்தனையோ சரித்திரங்களில் இருக்கின்றன. நாடக நிகழ்ச்சியாய் வரன்முறை உறவுகள் சரித்திரத்தில் இருப்பன கணக்கில. ஆனால்,சரித்திரக்காரர் பெரும்பாலும் முன்னதைத் தம் தர்க்கவாதத்தால் மறைத்தும், பின்னதை வரிசை அமைப்பினால் பிரித்தும் விடுகின்றனர். எனினும் சரித்திரம் பயில்கின்ற மாதர் அவைகளைத் தம் நுண்ணிய உணர்வினால் கருத்துள் கொள்பவர் ஆதல் வேண்டும். சரித்திர சம்பவங்களை வாசகத்தின் உதவிகொண்டு தம் மனோபாவத்தில் சித்திரமமைத்து நோக்க வல்லராய்க் கற்ற மாதரே சரித்திரங்களின் உயிர்நிலையைப் பற்றியவ ராவர். இட்டார்க்கு இட்டபலன் என்னும் தெய்வ விதியின் தருமம் சரித்திர சம்பவங்களுள் மறைந்து கிடப்பினும் அதனைத் தொடர்ந்து செல்வதற்கும், தன்வினை தன்னைச் சுடுமாறு அமைந்த நீடிய நெருப்பின் நூல்கள் தீமையோடு துன்பத்தைப் பிணைத்துப் பின்னி நெய்து கிடப்பதைச் சரித்திர அந்தகாரத்துள் காண்பதற்கும் உரியவள் அவளே. அல்லாது, சரித்திரமென்பது பண்டைநாள் நிகழ்ச்சிகள் மாத்திரம் என்று எண்ணலாகாது. அன்றன்று அவளுக்கு அமைதியோடு கழிகின்ற ஒவ்வொரு நிமிஷமும் சரித்திரமாகவே தீர்கின்றன. இதன்பாலும் அவளோடு ஒரேகாலத்தில் உடன் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளின்பாலும் அவளது பரிவு நிறைந்து பாவுதல் வேண்டும். இந்நாள் நிகழ்கின்ற துன்பங்களுக்கு ஏற்றவாறு பரிவுகூர்ந்து துயருறுவாளாயின் பின்னாள் அவை தோன்றாவே. அவள் கண்களிற் படவில்லையாயினும் நாடோறும் எங்கும் நிலவி வருத்துகின்ற கஷ்டத்திற்கு எதிரில் அவளைக்கொணர்ந்து நிறுத்தினால், பிறகு தன் கருத்தும் செய்கையும் எவ்வகைத்தாகும் என்று ஊகித் துணருமாறு அவள் மனோபாவத்தைப் பயிற்சிசெய்து கொள்ள வேண்டும். தனது வாழ்விற்கும் அன்பிற்கும் இடனுய இச்சிறு உலகமும் சுற்றமும், கடவுளின் வாழ்விற்கும் அன்பிற்கும் பாத்திரமாய அண்டகோளகைகளும் மன்பதைத் தொகுதியும், ஆகிய இவ்விரண்டு விஷயங்களையும் அளவினால் சீர்தூக்கிப் பின்னதைக் கருதுங்கால் முன்னது இல்லதென்றே என்னும்படியாய தன்மையை அவள் அறியுமாறு போதிக்கும் போதனை அவளுக்கு மிகச் சிறந்து உரியதாகும். கடவுளைக் குறித்துச் செய்யும்பக்தி தனதுநினைவினிலடங்கும் மாந்தர்தொகை அதிகமாவதற் கேற்பக் குறையலாகாது. புருஷனுக்கும் பிள்ளைக்கும் உற்ற சிறுதுன்பத்தைத் தீர்க்குமாறு தெய்வத்தைநோக்கிச் செலுத்தும் பிரார்த்தனையின் தீவிரம், ஏனென்று கேட்பாரின்றித் துயரால் தவிக்கின்ற எண்ணிறந்தோர் குறைகளைக் கருதிச் செய்கின்ற பிரார்த்தனையின் ஊக்கத்தில் ஓரளவும் தணியாது வளரப் பயில்வதற் குற்றனவே அவளுக்குரியனவாம். நிர்க்கதியாய்த் தாழ்வுற்றழுங்கும் மாந்தரடங்கலும். நம் பிரார்த்தனைக்குப் பாத்திரராவார்.

K. இராஜகோபாலன்.

# வர்த்தமானம்.

**மதுரையில் தீ விபத்து:**—சென்ற வாரம் மதுரையில் ஒரு தெருவில் தீப் பிடித்துக்கொள்ள அதனால் 35 வீடுகள் எரிந்துபோயின வென்றும், 70 குடும்பங்கள் வீடில்லாது வருந்துகின்றன என்றும் தெரிகிறது. அதிகாரிகளும், பொது ஜனங்களும் தேவையானதைச் செய்து வருகின்றனராம்.

***

**ஆடம்துரை காலஞ் சென்றார்:**—கவர்மெண்டு பப்ளிக் பிராஸி கூட்டராயிருந்த ஜெ. வி. ஆடம் சென்ற வாரம் இறந்து போனார். இறப்பதற்கு முதல்நாள்கூட ஒருவழக்கு நடத்தினார் என்றும், மாலையில் விருந்திற்குச் சென்றிருந்தார் என்றும் தெரிகிறது.

***

**ராவல் பிண்டியில் ராயல் கமிஷன்:**—ராயல் கமிஷன் அங்கத்தினர்கள் மார்ச்சு மாதம் 24ந்தேதி ராவல் பிண்டி போவதை அறிந்த காங்கிரஸ்காரர்கள் கருப்புக் கொடி பிடித்துக்கொண்டு ராவல்பிண்டி ரயில்வே ஸ்டேஷனுக்கு ஊர்வலமாகச் செல்லத் தீர்மானித்து அவ்வாறே புறப்பட்டனர். போலீஸ் அதிகாரி லைசென்ஸ் பெறாது ஊர்வலம் செல்லக்கூடாது என்று உத்திரவிட்டுப் பிறகு காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசியையும் மற்றும் சிலரையும் கைதுசெய்து சிலமணி நேரத்திற்குப் பிறகு விடுதலை செய்தார் என்று தெரிகிறது.

***

**பர்தோலியில் சத்தியாக்கிரகம்:**— பர்தோலியில் உள்ள ஜனங்கள் அரசாங்கத்தார் நிலவரியை அதிகப்படுத்தியதை விரும்பாது சிலமாதமாக மாறுபட்டு வந்தனர். சமீபத்தில் ஆமதாபாத் வாசியான வல்லபாய் பேட்டல் கூறிய மத்தியஸ்த ஏற்பாட்டை அரசாங்கத்தார் மறுத்துவிடவே, பர்தோலி வாசிகள் வரிகொடாமல் சத்தியாக்கிரஹம் செய்வதென்று தீர்மானித்து விட்டனர். முதல் கிஸ்தியைச் செலுத்திய சிலரும் இனி கிஸ்தி செலுத்தாதிருக்க ஒப்புக்கொண்டனர் என்று தெரிகிறது. சத்தியாக்கிரஹப் பிரசாரம் பலமாக நடந்து வருவதாகப் பம்பாய்ச் செய்திஒன்று கூறுகிறது.

***

**போலீசாருக்குக் கதருடை:**—சென்ற வாரம் கூடிய சென்னைச் சட்டசபைக் கூட்டத்தில் போலீசாருக்குக் கதருடையே இனித் தரவேண்டும் என்று காங்கிரஸ் கட்சியார் ஒரு தீர்மானம் கொண்டு வந்தனர். இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் ஸ்ரீ சத்தியமூர்த்தி ஐயர், ஐரோப்பிய அங்கத்தினரும் அரசாங்க அங்கத்தினரும், 'இந்தியாவின் பொருளாதார நன்மைக்கான விஷயங்களில் தாங்கள் உதவி செய்வோம்,' என்று அடிக்கடி கூறியுள்ளதை ஞாபக மூட்டுவதாகச் சொன்னார். வழக்கப்படி ஐரோப்பியரும், அரசாங்க அங்கத்தினரும் எதிர்த்தனர். கடைசியில் தீர்மானம் நிறைவேறியது.

***

**ஐரோப்பியர் இந்துவானார்.**—நாஷனல் கெமிகல் கம்பெனி யெனும் வியாபாரஸ்தலத்தின் டயரக்டரான டாக்டர் W. H. R. மூரே என்னும் ஐரோப்பியர் வியாபார விஷயமாக இந்தியா வந்தார். அவர் பலஇந்துமதப் பிரசங்கங்களைக் கேட்டதின் பயனாக இந்துமதத்தின் மேல் பற்று ஏற்பட, அவர் மார்ச்சுமாதம் 22ந்தேதி இந்துவாக மாறினார். அவர் ஆரிய சமாஜப் பிரசாரகருக்கு எழுதிய கடிதமொன்றில் கூறியதாவது:—

"நான் பம்பாயில் மூன்றுவாரமே தங்க நினைத்தவன். உங்கள் பிரசங்கம் என்னை வசீகரித்துவிட்டது. இனி இங்கேயே தங்கி இந்து மதத்திற்கும் ஏழைகளுக்கும் தொண்டு செய்வதே எனதுவேலையெனக் கொண்டு விட்டேன்."

இவர் வெகுகாலமாகவே விவேகானந்தர் பிரசங்கங்களையும், வேத புத்தகங்களையும் படித்து ஆத்மவிசாரணை செய்து வந்ததாகத் தெரிகிறது.

**சிரத்தாநந்தர் மண்டபத் திறப்பு விழா:**—லாகூரில் ஸ்வாமி சிரத்தாநந்தர் மண்டபத்தை ஸ்ரீமாளவியா மார்ச்சுமாதம் 24-ம் தேதியன்று திறந்துவைத்தார். லாகூர் பிரமுகர்களும் தாழ்ந்த வகுப்பினரும் வந்திருந்தனர். ஸ்ரீமாளவியா மண்டபத்தைத் திறந்து வைக்கையில் கூறியதாவது:—

இந்து வைதிகமதப் புனருத்தாரணத்திற்கும், தாழ்ந்த வகுப்பினருக்கும் உழைத்த ஸ்வாமி சிரத்தாநந்தரின் பேரால்இம்மண்டபம் நிறுவியுள்ளது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. சிரத்தாநந்தரின் வாழ்க்கையின் தூய்மையையும், அவர் வாழ்க்கையில் கொண்ட வேலையையும் எங்கும் பரப்ப இச்சங்கம் துணைநிற்கும். உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடுகளை இந்துமதத் தத்துவம் அறியாது. எனவே தாழ்ந்த வகுப்பினர் என்போரை நாம் உயர்த்துவதும், கிணறு, குளங்களில் தண்ணீர் எடுக்கவும், ஆலயங்களில் கடவுள் வழிபாடு செய்யவும் அவர்களுக்கு நாம் உரிமை யளித்தலும் அவசியமாகும். தீண்டாமையைச் சாத்திரம் ஏற்பதாகத் தெரியவில்லை.

பின்னர் வேறுபலர் தீண்டாமை யொழித்தலைப்பற்றிப் பேசக் கூட்டம் இனிது முடிவுபெற்றது.

***

**ஐக்கிய சங்க மகாநாடு:**— சென்ற வாரம் குடிவாடா என்னுமிடத்தில் கூடிய கிருஷ்ணா கோதாவரி ஜில்லா ஐக்கிய நாணய சங்க மஹாநாட்டில் தலைமை வகித்த கனம் ராமதாஸ் பந்துலு பேசியதாவது,—

"இந்தியாவில் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதமுள்ள ஜனங் கிராமவாசிகளே. அவர்களில் பெரும்பாலார் விவசாயத்தையே ஜீவனத் தொழிலாகக் கொண்டவர். விவசாயிகளின் பொருளாதாரநிலை திருப்திகரமானதாக இருக்கவில்லை. படித்தவர் பொதுஜன நலத்தைக் கவனிப்பதில்லை. வயிறுவளர்க்க வென்று நகரையடைந்து சேவக விருத்தியில் அமர்கின்றனர். இந்நிலை இன்னும் சிலவருஷம் இருந்து வருமாயின் இந்தியாவில் வறுமையும் பிணியும் அதிகரிக்கும். இப்பொழுது ஏழை ஜனங்களுக் கென்றும், விவசாயிகளுக் கென்றும் ஏற்பட்ட ஐக்கிய இயக்கம் பாமர ஜனங்களிடம் சரியே புகவில்லையாதலால், இன்னும் இவ்வியக்கம் தரும் உதவியை விவசாயிகள் முழுதும் அனுபவிக்கக் கூடாதவர்களா யிருக்கின்றனர். சென்னை மாகாணத்திலுள்ள விவசாயிகளின் சராசரிக் கடன் 90கோடி முதல் 100 கோடிவரை யிருக்கும். விவசாயிகளை எவ்வழியிலும் முன்னேற விடாதிருப்பது இக்கடன்தான். இனி ஐக்கியசங்கங்கள் இவர்கள்கடன்களைத் தீர்ப்பதற்கு முயலவேண்டும். இக்காரியம் கிராமச் சங்கங்களினால் மாத்திரம் முடியாது. கிராமச் சங்கங்களையும், அடமான பாங்கையுமுடைய் ஒரு பகுதியில் பரிக்ஷார்த்தமாக ஐக்கிய சங்கத்தார் கடன்களைத் தீர்க்க முயன்று பார்க்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. பல கிராமங்களில் ஐக்கிய நாணய சங்கங்கள் உறங்கிக் கொண்டிருக்கின்றன. இதற்குக்காரணம் திறமையான மேற்பார்வையில்லாமையே. கிராமச்சங்கங்களுக்கு ஒரு கணக்குப் பரிசோதகர்(Auditor)வீதம் இருத்தல் அவசியமாகும். பலவிடங்களில் கொடுத்த கடன்களும் வசூலிக்கப் படவில்லை என்று அறிகிறேன். கிருஷ்ணா கோதாவரி வட்டத்தில் 50 ஆயிரம் டிக்கிரிகளுக்கு மேல் நிறைவேற்றப்படாமலிருக்கின்றன வென்று தெரிகிறது. இது போன்ற நிலையில் சங்கம் இருந்தால் பிரயோஜனம் ஒன்றும் ஏற்படாது. இதை முக்கியமாய்ச் சங்கத்தார் கவனித்து வேண்டுவன செய்து ஏழைகளை உய்விப்பார்களாக."



(6) ஸ்ரீமத் வால்மீகி

**இராமாயண வசனம்.**

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு
தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு
பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் | 244 பக்கம் | | 6 காண்டம் |
| அயோத்தியாகாண்டம் | 501 | ,, | |
| ஆரணியகாண்டம் | 254 | ,, | |
| கிஷ்கிந்தாகாண்டம் | 226 | ,, | ரூ 15 |
| சுந்தரகாண்டம் | 260 | ,, | |
| யுத்தகாண்டம் | 702 | ,, | |
| சுந்தரகாண்டம் தனியே | | ரூ. | 2 4 0 |

**கே. மஹாதேவன்,** புஸ்தக வியாபாரம்,
1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை




பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தா தாராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திக ளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாய் வெளி வருகிறது. முப்பத்தி நான்காவது ஆண்டு நடக்கிறது. பத்திராதிபர்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை. வருஷ சந்தா ரூபாய் 4. வெளிநாடுகளுக்கு ரூபாய் 6.

லோகோபகாரி பத்திரிகாலயம்
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.
மாதிரிப்பிரதி இனாம். (7)

**யுனைடட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ்**
(2) **கம்பனி, லிமிடெட்.**

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்
பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம்.

188996.

சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமாயிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனால் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யுரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றார்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யுரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281,
10, மக்லீன் தெரு, சென்னை.

ஸ்டார் அண்டு கம்பனி
மானேஜர்கள்.

(1) இண்டஸ்டிரியல் & புருடன்ஷியல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய். [1913

நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்
இந்திய லைப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்) Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.
Sir. ஹூகும் சந்து ஸரூப் சந்து K. T. வேல்ஜி லக்ஷிமி B. A. L. L. B.
மோடிலால் C. ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய். லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோஸிஷா எம். மேத்தா M. A. L L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2,21592.
வசூலிக்கப்படாத மூலதனம் ரூ. 16,25000.

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில் கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளே உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.
விவரங்களுக்கு எழுதவும்:—

நாராயிண் தாஸ் கிர்தர்தாஸ்,
உள்ளூர் மானேஜர்,
நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.

Dr. Orison Swett Marden's
World-Famous Inspirational Books

(3)
TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

**Special Indian Edition Rupee 1-8-0 each**

V. KALYANARAM IYER & Co.,
BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)